# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை


| | | |
|---|---|---|
| மலர்: 9<br>இதழ்: 9<br>விலை 25 ந.பை | ஹேவிளம்பி ஞு மார்கழி மீ<br>டிசம்பர் '57—ஜனவரி '58 | வருட சந்தா<br>ரூ. 2-4-0 |



-Page. No—417-
ACC. No. 18582-




முதன்மையான வேத வேள்வியின் மூலம் அன்பு மிக்கு
அவிசளித்து சிவப்ரீதி செய்து,
சொலற்கரிய முக்தி பெற்ற சோமாசிமாறர்
பெரியபுராணச் சித்திர விளக்கம் 45; பக்கம் 387

## உள்பொருள்


| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம் |
| 1. மயில் வாகனன் | (திருப்புகழ் மணி) | ... | 385 |
| 2. சோமாசிமாற நாயனர் | (கி. வா. ஜகந்நாதன்) | ... | 387 |
| 3. ஆறுபடை வீடுகளின் தத்துவ அமைதி (திருப்புகழ் சதுரர் சே.த. ராமலிங்கம் பிள்ளை B.A.B.T.) | | ... | 388 |
| 4 சொக்கநாதப் பாவலர் | (ரஸபதி) | ... | 395 |
| 5. கீதை காட்டும் பாதை | (அ. ராமமூர்த்தி) | ... | 408 |
| 6. பக்தியின் சக்தி | (ஆ. கி. ரங்காராஜன்) | ... | 411 |
| 7. நிலமும் பசியும் | (கி.வா.ஜ.) | ... | 418 |
| 8. திருப்போரூர் திருப்புகழ் விரிவுரை | (குகஸ்ரீ) | ... | 422 |
| 9. மனமே துதிபாடு | (பில்லூரான்) | ... | 428 |
| 10. Divine Discontent | *(Thiruppugal Mani)* | ... | 431 |


## அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ முதல் பங்குனி மீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 (2-25) முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 10—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினுல் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினுல், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தாத் தொகையை பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு: முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3—6—0 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1

# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

| மலர் 9 | ஹேவிளம்பி ௵ மார்கழி ௴<br>டிசம்பர், 57—ஜனவரி, 58 | இதழ் 9 |
|---|---|---|

## மயில் வாகனன்

(திருப்புகழ்மணி)

*மண்டலமிட்டாடும் நாகபந்த மாமயில் வாகனனுய்க்*
*குண்டலமாதிரண்டும் சுடர்விடக் கோமளனே வருவாய்*

*"தேகோநாகம் ஜீவோநாகம்*
*ப்ரத்யக பின்ன ப்ரம்மைவாகம்"*

முருகன் மயில்மேல் வருகிறான். மயில் நாகத்தைத் தன் காலில் பிடித்து அடக்கி நடக்கிறது. இதன் பொருள் என்ன? 'நான்' 'தான்' எனும் அகம் ஒழிந்தது.

ந-அகம், நாகம். "என் செயல் மாண்டடங்க, பக்தன் நாகமாகின்றான். நான் என்ற இடம் ஒழிந்தால் அதாவது அகம்பாவம் பிரிந்தால், தான் என நின்ற உலகம் நிற்கும். அதுவே ஓம்காரமாம் மயில் ஆகவே உலகெலாம் நிறைந்த ஓம்காரத்துள் புகுவதற்கு 'அகம்' எனும் பாவத்தை விட்டொழித்து நா-அகம்; நாகமாய் நின்று விட்டால் நாகத்தின்மேல் மயிலாம் ஓம்காரம் தோன்ற, ஓம்காரத்துள் உறையும் இறைவன் முருகனும் தோன்றுவான். நாகத்தையும் காலில்

---

ஆன்மப் பசிக்கே ஆகாரம் ஆனஅருள்
தான்வந்தே எம்மைத் தழுவுவதும் என்றேயோ.

பிடித்த மயில்மேல் உள்ள முருகன் உருவம் இந்த வழியையே உணர்த்துகின்றது. உலகத்தில் அகங்காரமே ஆண்டவனை மறைக்கிறது. அகங்காரம் ஒழிந்தால் ஓம்காரந்தான். அனுபூதியில் ''யானாகிய என்னை விழுங்கி வெறும் தானாய் நிலை நின்றது தத்பரம்'' என்றார் அருணகிரியார்.

'நான்' 'நான்' என்ற அகத்தை நாசம் செய்து, (நா-இல்லை + அகம் நான்) நானற்ற இடமாய் விட்டால் அந்த இடத்தின் மேலே எப்பொழுதும் மயில், (அல்லது) ஓம்காரமாகிய தான் ஆடுவதைக் காணலாம். அகத்தைச் சுற்றியது உலகம். உலகமே ஓம்காரம். அகம் ஒழிந்தால், எஞ்சி நிற்பது உலகம்தான். உலகத்துக்குள் கரைந்து நிற்பது அகம் இந்தக் கலந்த உணர்ச்சியில்தான் நான் அழிந்த தான் நிற்பது. தானென்னும் தலத்தில் பிரகாசிப்பது தத்பரம். தத்பரம் என்ற மயில்மேல் ஒளிர்வது பிரம்ம ஜோதி. நாகப்பாம்பாகிய மனத்தின் மேல் நானென்னும் உணர் வற்று, ஓம்காரமாம் மயிலை ஏற்றி நினைத்துப் பரஞ் ஜோதி (அல்லது) பிரம்மஜோதியாய் நின்ற முருகனைப், பார்! இதைத்தானே உபதேசிக்கிறது மயில் வாகனக் காட்சி.

கந்தரலங்காரத்தில் அருணகிரியார் உபதேசிப்பதும் இதுவே. ''யான்'' ''தான்'' எனும் சொல் இரண்டும் கெட்டாலன்றி யாவர்க்கும் சத்தியம் தோன்றுதுகாண் என்பது கந்தரலங்காரம். அனுபூதியில் ''என்னையிழந்த நலம்தான் என்ன? முருகா சொல் என்றார். பிறகு அந்த நலத்தை அநுபூதியில் விளக்குகின்றார். அதுவே தானாகிய தத்பரம். இதை மனோ நாசம் என்றும் சொல்வார்கள். மயில்வாகன சொருப தரிசனம் இந்தத் தத்துவத்தை விளக்குகிறது.

---

அறிவுப் பசிக்கிரையாய் ஆர்ந்தகலை முற்றும்
மறிவு வருமுனெனில் மலர்வதுவும் என்றேயோ

திருப்புகழில் இதை "நாலந்த வேதத்தின் பொருள்" என்ருர். அறிவும் அறியாமையும் கடந்த அறிவு இதுதான். கழுகுமலை முனிவர் விளக்குவது இதுவே.

"நித்யாகாரம் நிகிலவரதம் நிஷ்களம் பிரம்மதத்வம்
நித்ய தேவைர்வினுத சரணம் நிர்விகல்பாதியோகம்
நித்யாட்யந்தம் நிகமவிதிதம் நிர்க்குணம் தேவதேவம்
நித்யம் வந்தேமமகுருவாம் நிர்மலம் கார்த்திகேயம்

அட்டைப்பட விளக்கம்

# சோமாசிமாற நாயனுர்

(கி. வா. ஜகந்நாதன்)

எங்கே பார்த்தாலும் பசுஞ்சோலை; நல்லோர்களின் உள்ளம் போலக் குளிர்ச்சியைத் தரும் பூம்பொழில்கள். மாமரங்கள் தழைத்து மலர்ந்து நிற்கின்றன. இத்தகைய வளம் பொருந்தியது அம்பர் என்ற திருத்தலம், சோழ நாட்டுப் பழம்பதிகளில் ஒன்று அது.

அங்கே வேதியர் குலத்தில் வந்தவர் மாறர் என்பவர். இறைவனுக்கு அன்பர்கள் யார் வரினும் அவர்களுடைய திருவடியைப் பணிந்து அமுதூட்டுவதைத் தம் கடமையாகக் கொண்டு வாழ்ந்தார். 'இறைவனை எண்ணி அவரைப் போற்றி யாகம் பல புரிவதனுல் ஏழுலகில் உள்ள உயிர்களும் நன்மை அடையும். அப்படிச் செய்ததன் பயனுகவே இறைவனை மறவாமல் வாழ்த்தும் வாழ்க்கை கிடைக்கும்' என்ற உறுதி பூண்டு அவர் வேள்விகள் பல செய்தார். பல சோம யாகங்களைச் செய்தமையால் அவரைச் சோமயாஜி என்றே யாவரும் அழைக்கலாயினர். சோமாசி மாற நாயனுர் என்று மதிப்புடன் சிவனடியார்கள் வழங்குவர்.

---

காட்சிப் பசிக்கமுதாய்க் காணும் உலகிதனில்
ஆட்சிசெயும் நின்னை யறிவதுவும் என்றேயோ

ஈசனுக்கு அன்பரானவர்கள் எந்த இயல்புடன் இருந்தாலும் அவரே நம்மை ஆட்கொள்ளும் தகுதி உடையவர் என்ற உறுதிப்பாடு உடையவர் அவர், சிவபெருமானுடைய திருவைந்தெழுத்தை மறவாமல் செபித்து இன்புறுகிறவர்.

சிவபெருமான் உறையும் திருத்தலங்களுக்குச் சென்று வழிபடும் வழக்கமும் அவரிடம் இருந்தது. ஒருமுறை திருவாரூருக்குச் சென்றிருந்தபோது அங்கே சுந்தரமூர்த்தி சுவாமிகள் பரவை நாச்சியாரோடு எழுந்தருளி யிருப்பதை அறிந்தார். அப்பெருமானுடைய பக்திச் சிறப்பையும் பிற பெருமைகளையும் நன்கு உணர்ந்து அவரை அணுகிப் பாதம் பணிந்து வழிபட்டார். சிவனடியாரிடம் அளவற்ற அன்பு கொண்ட சோமாசி மாறரிடம் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு அன்பு உண்டாயிற்று. இருவரும் நண்பர்களாயினர்.

இறைவன்பாலும் அடியார்களிடமும் முறுகிய அன்பு பூண்ட சோமாசி மாற நாயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் மிக்க பக்தியுடையவராகித் தொண்டு புரிந்து வாழ்ந்தார். பின்பு இறைவன் திருவருளிற் கலந்தார்.

---

# ஆறுபடை வீடுகளின் தத்துவ அமைதி

(திருப்புகழ் சதுரர் சே. த ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

## குன்றுதோருடல்

குன்றுதோருடல் என்பது பல மலைத் தலங்கள் கொண்ட தொகுதி என்பது முன்னரே கூறப்பட்டது. அவற்றில் சிலவற்றைப் பற்றிச் சிந்திப்போம்.

### தணிகை மலை:

நதியிற் சிறந்த கங்கையைப் போலவும், பதியிற் சிறந்த காஞ்சியைப் போலவும், மலரிற் சிறந்த தாமரை போலவும்

---

**கேள்விப் பசிதவிர்க்கும் கேண்மைச் சிவஞானம்**
**ஆள்விக்க என்னை அணுகுவதும் என்றேயோ**

மலையிற் சிறந்தது தணிகை மலை. ஆறுமுகமான பொருள் அமர்ந்த மலை தணிகை மலை. அடியார் குழாம் கூடிவந்து அருட் புகழைப் பாடுமலை. அருணகிரி புகழும் மலை. அன்பரெல்லாம் துதிக்கும் மலை. செங்கழு நீர் மலர் மலர்ந்து என்றும் மணங் கமழும் மலை. அந்தி வண்ணர் நந்தியொடு அகத்தியரும் வணங்கும் மலை. இந்திரனும் இராகவனும் எப்போதும் பணியும் மலை.

பெயர்ச் சிறப்பு:

மலையின் பெயர் தணிகை அல்லவா? தணிகை என்றால் தணிதல், அவிதல் என்று பொருள். என்னென்ன தணியும் தெரியுமா? பணிவார்க்குப் பசி தணியும்; பாடுவார்க்குப் பயந் தணியும்; திருநாமம் படிப்பார்க்குப் பகை தணியும்; பரவுவார்க்குப் பிணி தணியும்; நினைப்பார்க்கு வினை தணியும். இன்னும் என்ன என்ன ஏற்படும் என்றால், நினைத்தவை அனைத்தும் குறைவின்றி நிறைவேறும். ஓடி அலைந்து குன்றிக் குலையும் மனமும் ஒரு வழிப்பட்டு அமைதியுறும். உய்யு நெறி காட்டும் உண்மை நெறி உணர்ந்து, தத்துவங் கடந்த தனி நிலை சார்ந்து நித்திய சத்துக்கள் சித்தமும் நிரம்பும்.

இக்கருத்துக்களை நமது சந்த முனிவர் அருளிய செந்தமிழ்ப் பாசுரம் செவ்வையாய் உணர்த்துகிறது. படியுங்கள்.

"நினைத்தது எத்தனையில்—தவறாமல்
நிலைத்த புத்திதனைப்—பிரியாமல்
கனத்த தத்துவமுற்று—அழியாமல்
கதித்த நித்தியசித்து—அருள்வாயே
... ... ... ...
திருத்தணிப் பதியிற்—பெருமானே.

---

மோப்பப் பசிக்குணவாய் முன்னுள் அருள்மணமே
கோப்பு செய்தே என்னைக் கொள்வதுவும் என்றேயோ

## பசி தணிக்கும் பண்பு

புறவுலகிலுள்ளார் இம்மைப் பயனையே நாடுவர். அவர்கள் இறைவனை இறைஞ்சுவதெல்லாம் பசி நீங்க, மிடியகல, பிணி யழிய, பகை ஒழியவே ஆகும். இம்மை நலன்களையும் ஈயவல்லது தணிகை மலை. அருவமாய் அமரும் ஆதி சோதியன் அருளினால், உருவமாய்க் கொண்ட திருவுருவம் முருகப் பெருமானின் அருமை உருவமே. அதாவது கந்தனை வந்த வுருவம் கருணைகூர் வடிவமேயாம். அதே போல அந்தத் திருத்தணிக் குமரன் திருக்கை வேலும் கருணைக் களஞ்சியமாகும் மக்களைவிட அதிக பசி யுடையவை அலகை என்னும் பேய்க் கூட்டங்களே. ஆகையால் தான் இன்றும் அதிக உணவுக்கு ஆர்வங் காட்டும் ஒருவனைப் பார்த்துப் 'பேய் போல் அலை கின்றாய்' எனக் கூறுவது உண்டு. அத்தகைய பசியுள்ள பேய்க் கணங்கள் முசித்தழுது முறையிடாமல் தின்னக் கொழுப்பும், பருகக் குருதியும் (ரத்தமும்) கொடுத்து அலைகளுக்கு அருள் புரிய கை காட்டி அழைக்கிறது கந்தன் கதிர்வேல்.

"பசித்து அலகை முசித்து அழுது
முறைப்படுதல் ஒழித்து அவுணர்
உரத்து உதிர நிணத்தசைகள்
புசிக்க அருள் நேரும்.

... ... ... ... ...

தலத்திலுள் கணத்தொகுதி
களிப்பின் உ(ண்)ண அழைப்பதென
மலர்க்கமல கரத்தின் முனை
விதிர்க்க வளைவாகும்"

எனவே பேய்ப் பசியும் தணிக்கும் பெருமையை அறிக.

---

ஆக்கைப் பசிதவிர்க்க லானசிவ வியாபகந்தான்
தாக்கியெனை யேற்றுள் தழுவுவதும் என்றேயோ

## மிடியகற்றும் மேன்மை

"தமியன் மிடியால் மயக்கம் உறுவனோ? கலியாண சுபுத்திரனாக குறமாது தனக்கு விநோத! கவினுறு புயத்தில் உலாவி விளையாடிக் களிகூறும் உனைத் துணை தேடும் அடியேனைச் சுகப்படவே வை, கடனாகும் இது கனமாகும் முருகோனே" எனப் பணியும் பத்தர்களை, 'முழுதுங் கெடுக்கும் மிடியாற் படியிற் விதனப்படாமல்' விளங்க வைக்கிறான் வெற்றிவேல் இறைவன்.

"முடியாப் பிறவிக் கடலிற் புகார் முழுதுங்கெடுக்கும்
மிடியாற் படியில் விதனப் படார்"

(கந்தர் அலங்காரம்)

## பிணி நீக்கும் பெருமை

பிணிப்பதால் பிணி என்று நோய்க்குப் பெயர் வந்தது. இது இரு வகைப்படும். உடலில் வந்த நோய் என்றும், உடலைத் தந்த நோய் என்றும் கூறப்படும். உடலில் வரத நோயின் பட்டியலை திருப்புகழ் நாவலர் தெரிவித்தது போல சிறந்த மருத்துவ நூலுங்கூட தெரிவித்ததில்லை. அவற்றை அறிவித்து அந் நோய் நீங்க விண்ணப்பஞ் செய்கிறார் அருணகிரியார்.

"இருமலு ரோகம் முயலகன் வாதம்
எரிகுண நாசி—விடமே நீர்
இழிவு விடாத தலைவலி சோகை
எழுகள மாலை—இவையோடே
பெரு வயிறு ஈளை எரிகுலை சூலை
பெருவலி வேறும்—உளநோய்கள்
பிறவிகள் தோறும் எனை நலியாத
படி உனதாள்கள்—அருள்வாயே
... ... ... ...
தனிமலை மேவு—பெருமாளே

---

நெஞ்சப் பசிதவிர்க்கும் நின்மலனென் உள்ளத்துள்
கொஞ்சி யிருந்து குலவுவதும் என்றேயோ

## பிறவி நோய் நீக்கும் பெற்றி

"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்"

என்பது பொதுமறை. மருந்து உதவும் மருத்துவன் முதலில் வாத பித்த சிலேத்துமம் என்ற மூன்று நாடிகளை முறைப்படக் கவனித்து நோயை அறிவான் திருவள்ளுவர் அதே போல் நாடி என்று மூன்று முறை அந்தக் குறளில் அமைத்து மருத்துவஞ் செய்யும் வழியை வகுத்துக் காட்டுகிறார். நோய் இன்னதென்று அறியாமலே மருந்து தருபவர்களையும் கண்டிருக்கிறோம். நோயொன்றிருக்க மருந்து ஒன்று உண்டால் நோய் நீங்குமா? ஆதலால் முதலில் நோயை அறிந்து கொள். பின் அந்நோய் வந்த வகையைத் தெரிந்து கொள். அதன் பின்னர் அதனை உண்ணுவார் உடல் நிலை, வசதி முதலிய தகுதியையுணர்ந்து தீர்க்கும் மருந்தையும் உதவு என்கிறார் வள்ளுவனார். பெரும்பாலும் உடலில் வந்த நோய்களுக்கே மண்ணுலகத்து மருத்துவர் மருந்து தருவர். ஆனால் வினையால் விளையும் பிறவி என்னும் உடலைத் தருகின்ற பவரோகத்தை மாற்றவல்ல மருத்துவன் உண்டா? உண்டு. அவனே தணிகைத் தயாநிதி. அவனையே 'பவரோக வயித்தியநாதன்' என்கிறார் அநுபூதி அடிகள்.

## பவமகற்றும் பாங்கு

நோய் வகைகளில் பல உண்டு. சில உண்ணும் உணவு வகையால் வரும். உதாரணமாக

"கத்திரிக்காய்ச் சூடு கடுமையாய்ப் புசித்தக்கால்
தொத்துச் சொறி சிரங்கைத் தூண்டிவிடும்"
"வெண்டைக்காய் நாளும் விரும்பிப் புசித்தக்கால்
கண்ட கபவாதங் காணுமே"

---

நிலையாகித் தெய்வ நிமலனடி யோர்ந்து
தலைவணங்கி வாழும் தகுதியுறல் என்றேயோ

சில செய்யுந் தொழிலால் வரும். கண்ணாடித் தொழில் செய்வாருக்கு க்ஷயம் என்னும் நோய் காணும். தீய ஒழுக்கத்தால் தாமே தேடிக் கொண்ட நோய்களும் பல வுண்டு. அல்லது தம் முன்னோர் வழியாக (பிதிரார்ஜித மாக)வோ, மனைவி வகையிலோ வரும் நோய்களும் உண்டு. எவையும் இல்லையானால் முன் செய்த தீவினையின் தீர்வையாக உண்டாகும் தொழு நோய் போன்ற தீராப் பிணிகளும் சில உள. ஆனால் என்றுமே மாறாமல் பிறந்து பிறந்து இறந்து இறந்து ஏங்க வைக்கும் பவப் பிணியே எல்லாப் பிணிகளைவிடக் கொடுமையானது. மற்றைய நோய்கள் உடலைச் செம்மையாக்கினால் ஒழிந்து விடும், ஆனால் உடலே வருதற்குக் காரணமான பவ நோய் உமை பாலன் அருளாலே தான் அகன்றொழியும். அதுவே உண்மையில் தீராப்பிணி எனத் தக்கது. க்ஷயரோகம் போன்ற பெருநோய் தீர மதனபள்ளி போன்ற மலையிடங் களில் வாசம் செய்வது நல்லது என மருத்துவர் கூறுவர். அது போலே பவரோகம் என்னும் தீராப்பிணி தீர தணிகை என்னும் மலைத்தல வாசம் நல்லதென்று பவ ரோக வயித்தியர் கூறுகின்றார். அதனாலே தான் "பவ நோயின் அலைப்பலவேகிச் சலமான பயித்தியமாகித் தடு மாறித், தவியாமல் பிறப்பையு நாடி, அதன் வேரை அறுத்து உனை ஓதி தலமீதில் பிழைத்திடவே நின் அருள் தாராய்" (தணிகைத் தலத்தில் உய்ந்து வாழ அருளுக) என அருணகிரியின் அருமை வேண்டலையும் உன்னுக.

பகை அழிக்கும் பரிசு

வேதமூர்த்தி திருத்தணி வெற்பு உறை சோதி, கார்த் திகை பெற்ற விளக்கொளி, வினைப் பகையறுத்து நினைத் தவை முடிக்கிறான்.

---

தாய்மை நிலைபாடித் தண்ணருளைத் தோத்தரிக்கும்
வாய்மையுள் நாவாகி வாழ்வுறுதல் என்றேயோ

"சொலற்கரிய திருப்புகழ்
உரைத்தவரை அடுத்த பகை
அறுத்தெறிய உருக்கி எழும்
அறத்தை நிலைகாணும்;
துதிக்கும் அடியவர்க்கு ஒருவர் கெடுக்க
இடர் நினைக்கின் அவர்
குலத்தை முதலறக் களையும்
எனக்கோர் துணையாகும்,
திருத்தணியில் உதித்தருளும்
ஒருத்தன்...வேலே.

## தத்துவ அமைதி

இது போலவே அகமுக நாட்டத்து அநுபவிகளுக்கும் ஞானப் பசி நீக்கி, அருளின்மை என்ற வறுமையை அகற்றி, பிறவிப் பிணி மாற்றி, அறுபகை அறுத்து அருளுவன் தணிகைத் துரை என்க. அரை நிமிஷ நேர மட்டில் தவமுறை தியானம் வைத்துப் பழகிய அன்பர் சாதகத்தால் அரை நிமிஷம், ஒரு நிமிஷமாய், ஒரு மணியாய், ஆண்டிற்கு ஒருநாள் என்னும் இருபத்து நாலு மணியாய், முந்நூற்று அறுபத்தைந்து நாள் என்று முதிர்ந்த ஒரு வருட அநுபவமாய் உயரும் சிறப்பை விளக்குவதற்கே திருத்தணியில் 365 திருப்படிகள் உள்ளன என்பதும் அறிக. தியானத்தால் ஆணவங் குன்றி ஆவி களிம்பு நீங்கிட ஆண்டவன் அழகு திருத்தணி மலையில் நடிக்கும் ஆடல் தரிசனமும் கிட்டும் என்பதால், இத்தலமும் குன்று தோருடல் வரிசையில் இடம் பெறுகின்றது.

(தொடரும்)

---

பைகளுள சேடன் பணியாம் பரம்பரனோர்
கைகள்தாங் கூப்பிக் களித்திருப்ப தென்றேயோ

## பலபட்டடை

# சொக்கநாதப் பாவலர்

(ரசபதி)

### முன்னிலை

மது என்பது தேன்; மறை என்பது வண்டு; துரை என்பவர் மன்னர்; மதுரை யென்பது சிவ ராஜதானி. மதுரமான மதுரையை, இப்படிக் களியொடு கூறுவா கவிவாணர்.

இரு நூறு ஆண்டுகட்கு முன், இப்பதியில் பலர் இருந்தனர். அவர்களுள் ஒருவர் சொக்கலிங்கம் பிள்ளை. அழகும் அறிவும் ஒழுக்கமும் அமைந்த அவர் மனையாள பெயர், மரகதம். அவர் நல்லற இல்லறம், அவளொடு நடந்தது.

பலபட்டடை என்பது, ஒருவகைப் பழங் கணக்கு. அதில தேர்ந்தவர் அவர் மரபினர். அப் பட்டம் சார்ந்தியே அவர்கள் பெயர்கள் அமைந்தன.

சொக்கலிங்கர், சிவ பக்தியிற் சிறந்தவர். அவர் வாய், எப்போதும் சிவ சிவ என்னும். பிறந்த பிள்ளைக்கும், சொக்கநாதர் என்றே பெயரிட்டார்.

பாலர் சொக்க நாதர், பள்ளித் திண்ணையிற் பயின்றார். பிள்ளையின் அறிவு, வரவரப் பிரகாசித்தது. புலவர் பலர், சொக்கலிங்கரிடம் நட்புப் பூண்டிருந்தனர். வீடு தேடி வரும் அவர்கள், மைந்தர் மதி கண்டு மகிழ்ந்தனர்.

பல இலக்கியங்களைப் பயிற்றினர்; உவந்து இலக்கணத்தில் உயர்த்தினர். சமய நூல்களிற் சார்பு படுத்தினர். அருள் நூற்களின் உறவு, இப்படி வரவர அதிகரித்தது. இதன் பயனாக, பரம தெய்வமே என்று, பாலர் இதயம் படபடத்தது.

தந்தையினும் பன்மடங்கு, மைந்தரிடம் பேறான சிவ பக்தி பிறந்தது. அதனால், பரமனை எப்போதும அவர் பாடுவதே தொழிலானார்.

அவரது கவி வளம் கண்டவர் களித்தனர்; தந்தை மகிழ்ந்தார், தாய் உள்ளம் தருக்கியது. பாலர்க்கு இப்போது வயது

---

தால்களால் ஏத்தித் தலைமேல்கை கூப்பியொளிர்
கால்களாற் கோயில்வலம் காண்பதுவும் என்றேயோ

பத்தொன்பது. பலபட்டடைச் சொக்கநாதப் பாவலர் என்று பாராட்டினர் பலர்.

## இடைப் பகுதி

சொக்கலிங்கம் பிள்ளை, ஒரு நாள், புனித சிவாலயத்துள் புகுந்தார். ஸ்ரீ சுந்தரேச மீனாட்சியைச் சேவித்தார். வெளிப்பட்டார். கோபுர வாயிலைக் கடந்தார். கால் தடுக்கியது. குப்புற விழுந்தார். கண்டவர் திடுக்கிட்டனர். ஓடி வந்தனர். வாரி யெடுத்தனர். பேச்சு மூச்சில்லை. தலை தொங்கியது. கூடி யிருந்தவர் குமுறினர். அவரை எடுத்தனர். ஒரு வண்டியில் இட்டனர். மாளிகை நோக்கி விரைந்தனர்.

வண்டிக்கு முந்தினன் ஒருவன். மாளிகையுள் குபுக்கென்று புகுந்தான்.

அம்மா! அம்மா!!

பதில் இல்லை.

ஐயோ! அம்மா! எங்கே போயிருக்கிறீர்கள்? சொக்கநாதர் கூட இல்லைபோல் இருக்கிறதே! திரும்பினான். பெரிதா யிருக்கிறது மீனாட்சி படம். அதன் எதிரில், படுத்திருக்கிறாள் அந்தப் பாக்யவதி.

அம்மா! எழுந்திருங்க அம்மா! ஐயா இறந்து விட்டார்; எடுத்துக் கொண்டு வருகிறார்கள்! வெடித்த குரல் கொடுத்து இப்படி விசும்பினான்.

இதற்குள், வண்டியும் வாயிலில் வந்து நின்றது. உடன் வந்தவர்கள், சொக்கலிங்கரின் எழிலான திருமேனியை எடுத்தனர். இப்படியும் ஆவதோ தெய்வமே! என்று, இடிந்த மனத்தொடு நுழைந்தனர்.

அக்கம் பக்கத்து அரிவையர் பலர், முந்தி நுழைந்தனர். மரகதம்மா! என்று குரல் கொடுத்துக் குமுறினர்.

எவ்வளவோ குரல் கொடுத்தேன்; எழுந்திருக்கவில்லையே! என்றான், எதிரில் இருந்தவன்.

அப்படியா என்று அணுகினர். அம்மா! என்று பல குரல்கள் அழைத்தன. பூவையைப் புரட்டினர். மூர்ச்சையாகி யிருக்கிறார்களா? என்ன இது? இருவர் முன் வந்தனர். படுக்கையி லிருந்து எடுத்தனர். தடம் புரண்டது தலை. ஐயோ! ஐயோ!! என்ற அலறல் பிறந்தது. என்ன வேதனை!

---

ஆடும் பொறிகளைநேர் ஆட்டுகின்றான் தாள்மலரைக்
கூடும்படி யென்னைக் கொண்டணைப்ப தென்றேயோ

ஆளன் இறந்த அப்போதே, புனித அவள் உயிரும் புறப்பட்டு விட்டது என்று அறிந்தனர்.

மரகதம் அம்மா! கருதத் தக்க பதிவிரதை நீ என்பதைக் காட்டினையா? என்று, பொங்கி யெழுந்தது புலம்பல் ஒலி. மண்ணும் அழுதது; மதுரைமா நகரமே, செய்தி யறிந்து சிலிர்த்தது.

மைந்தர் சொக்கநாதர், சென்றிருந்த இடத்தில் செய்தி யறிந்தார். ஓட்டம் பெரு நடையாய் வந்தார். பூவையரும் ஆடவரும், அவரைப் பார்த்துப் பொருமினர்.

அம்மா! அப்பா!! என்றபடி, மாறி மாறி இருவரையும் மைந்தர் தொட்டார்; துடிப்பில்லை; உடல் சில்லிட் டிருந்தது.

ஐயோ அம்மா! ஐயோ அப்பா! என்று அலறினர். ஒரு சேர இப்படியா நிகழும்? என்ன விபரீதம்! காலன் நாடகம், கண்ருவி யாக இருக்கிறதே!

இதுதானு உலகம்? இவ்வளவுதானு வாழ்க்கை?

எழுந்தார். ஆடியது உடல். நெடு மரம்போல் வீழ்ந்தார். புழுங்கி நிலத்தில் புரண்டார். கண்களில் பெருகிய நீர் கண்ணீரா? இல்லை, புண்ணீரா?

அவர் நிலை கண்ட அனைவரும் அஞ்சினர். பதைக்கும் அவரை இறுகப் பற்றினர்.

புலவரே! பொறும் பொறும்!! இரும் இரும்!! விதி விபரீதமாக விளையாடி யிருக்கிறது! என்ன செய்யலாம்? ஊர்க்கு உத்தமர்களான இவர்கள் பிரிவால், எங்கள் இதயமே வெடித்து விடும்போல் இருக்கிறது. தெளிந்த தங்கள் பொன்மொழி மூலந்தான், தேறுவோம்; மனம் ஆறுவோம்; வேறு வழியில்லை என்று விம்மலாயினர்.

யார் தான் என்ன செய்ய முடியும்? ஆறி மனம் அடங்கினர். அன்றைய சடங்கு, மறு நாள் செய்தி, உத்தரகிரியை எல்லாம், விறுவிறு என்று நிறைவேறின.

## பின்னைய செய்தி

பெற்றோரை யிழந்த புலவர்க்கு, உலகம் இருள் அடர்ந்தது போல இருந்தது. மூவர் இருந்த வீட்டில், ஒருவர் தனித்து இருக்க முடியவில்லை. அது கருதி, வளமான கிளி ஒன்றை வளர்த்தார்; பேசப் பயிற்றினர்; மனக் கவலையை, அதன் மூலம் மறந்தார்.

---

வானுருவி வந்தே வழங்குகின்ற பேரொளியில்
ஊனுருகப் புக்கு உறவுறுவ தென்றேயோ

கிள் கிள் என்பது, கிள்ளை மொழி. இவர் வளர்த்த கிளியோ, சொக்கலிங்கம்! சொக்கலிங்கம் என்று சொல்லும். கனிவுடன் அப்படிக் கற்பித்திருக்கிறார்.

காலையும் மாலையும், அவரை ஆலயத்தில் காணலாம். மற்ற நேரமெல்லாம், கிளியோடு கொஞ்சுவது கேட்கலாம்.

ஒரு நாள், அதற்குக் கோவைப் பழம் ஒன்று கொடுத்தார் வாங்க மறுத்தது கிளி.

என்ன அப்பா! என்மேல் கோபமா? கையில் எடுத்தார். பழகிய கிளி, அப்படியே படுத்தது.

துறுதுறுத்த பார்வை யில்லை. படுத்த கிளி கையில் படுத்தது தான். கிரியவே யில்லை.

உடம்பு சுகம் இல்லையா? ஆஹா! உடல் சில்லிட் டிருக்கிறதே! தடவிக் கொடுத்தார்.

கிளி, சொக்கலிங்கம்! சொக்கலிங்கம் என்று மெல்லச் சொல்லிற்று. எழுந்து விழுந்தது. கண்ணை மூடியது. அவ்வளவுதான்.

ஐயோ என்று அலறினர். உயிரான கிளி, உணர்ச்சி யற்றுப் போனபின், தன் சுவாசமே தடைப்படுவது போலத் தளர்ந்தார். கலகல என்று உதிர்ந்தது கண்ணீர்.

என்ன இது? இதுதானு உலகம்? வருவார். உறவு கொள்வார். மனம் கவர்வார். மறைந்து போவார். நாடகமே உலகம்! வாழ்க்கையே ஒரு கானல் நீர்!

தோன்றி மறையும் உலகில், வேண்டாத பந்தம் எப்படி எப்படி விளைகிறது? ஆற்றல் உடைய வினைகள், எப்படி எப்படி அடிமடக்குகின்றன? பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையில், மலையளவான மறைப்பு; கடல் அளவான கலக்கம்.

அளந்தோம்; இவைகளை அறிந்தோம்; இனி என்ன செய்வது? உலகைப் பற்ற வேண்டும்; அதை விட்டால், வேறு ஒன்றைப் பற்றித்தானே இருக்க முடியும்! அதுதானே ஆன்ம நிலை. தனித்திருக்க முடியாதே!

நிமலன் ஒருவனே நித்ய மங்களன். அப் புனித சிவத்தின் திருவடிகளே நமக்குப் புகலிடம். ஆம். அங்கே தான் அமைதி; அங்கேதான் ஆனந்தம்!

இதற்கு அயலான எவர் உறவும் வேண்டா; வேண்டவே வேண்டா என்று விரக்தி கொண்டார்.

---

எல்லாம் இயற்றுகின்ற எம்பெருமான் என்றென்றும்
வல்லான் வகையுணர்ந்து வாழ்வதுவும் என்றேயோ

*நிலைத்த விரக்தி நீடிக்க, யாத்திரையை மேற்கொண்டார்; தலங்களை யடைந்தார்; பரவிப் பாடினார்.*

உடம்பொடு வாழ்வார்க்குப் பசியுண்டு; பயம், சோகம் பற்றுவது உண்டு; ஏன் இந்தத் தொல்லை? சிவசிவ சிவசிவ! என்னை நின் திருவடி நிழலில் இடு இடு இடு இடு என்ற கருத்தே, அவருடைய எந்தப் பாட்டிலும் இருந்தது.

எவ்வளவு நாளாக வேண்டுகிறேன்! இரக்கம் காட்டவில்லையே எம்பெருமான் என்று, எண்ணி மனம் புண்ணானார்.

குடிபகோணம் சென்றார். அவரை யறிந்தவர்கள், அங்கு இருந்தனர்.

புலவர் பெரும! குடந்தை யீசர்மேல், பயனுள ஒரு கவி பாடுக் கள் என்று வேண்டினர்.

குடந்தை யீசர், நின்று படியளக்கும் நீலக் கொடிகள் இரண் டுடையார்; ஒரு கொடியான உமைக்கு, தன்னிடத்தில் அரை கொடுத்தார்; மற்றொரு கொடியான மாலுக்கு, கால் காட்டார். ஈயார் மேல் நான் பாட வேண்டுமா என்று, பாடல் ஒன்றைப் பாடினார். ஒரு பக்கம் விகடம்; ஒரு பக்கம் தத்துவம்; அருமையான பாடல் அது.

சிவ தலம் மற்றொன்றில் சென்றார், திருவடி நிழல் தாதாதா! தாதாதா என்கிறேன்; இரக்கம் காட்டார் இவர்.

சொந்த நோக்கம் இல்லாதார்; மறை நோக்கர்; அவர் அரை நோக்கர்; மனமே!

"முக்கண்ணர் என்றாலை முன்னோர் மொழிந்திடுவர்;
அக்கண்ணர்க்(கு) உள்ள(து) அரைக்கண்ணே;—மிக்க
உமையாள்கண் ஒன்றரை; மற்(று)ஊன்வேடர் கண்ஒன்(று);
அமையும் இதனால் அறி!"

பாதித் திருமேனியில் பார்வதியெனில், நெற்றிக் கண்ணில் பாதி; இடக்கண் ஒன்று; ஆக, தேவி கண் ஒன்றரை; கண்ணப்ப நாயனார் அப்பிய கண் ஒன்று; எனவே இரண்டரைக் கண்கள், அவர்கட்கே உரியன! இவைகளை எண்ணினால், முக்கண்ணர் என்ற பெயரே ஒழிய, அவர்க்கு இருப்பது அரைக்கண் தானே! என்ற அருமைக் கவியால், மனத்திற்கு ஆறுதல் செய்தார்.

வேதாரண்யம் சென்றார், தேவா! கையில் ஒரு புள்ளிமான்; பாகத்தில் உமை என்னும் பச்சை மான்; சடையில் கங்கை மான்;

---

ஆற்றல் தவமாக அம்மானென் உள்ளத்தில்
ஏற்றி விளக்கெதிரில் ஈடளிப்ப தென்றேயோ

திருமகளான மான் வாழும் மறைக்காட்டு நாதரே! ஆன்மாவான இம் மானுக்கு, எங்கே உளது இடம்? என்று வினவினார்.

மற்றுமொரு தலம் சென்றார். சிவனார் அணியும் எலும்புகளே! பாம்புகளே! பிறையே! கொக்கிறகே! புலித்தோலே! உருத்திராட்சங்களே! ஆண்டவனை நீங்கள் அடைந்தீர்கள்! அடையும் உபாயம் சொல்லுங்கள்! நானும் முயல்கிறேன் என்று மொழிந்தார்.

திருக்களந்தை, சீகாழி, சிதம்பரம் முதலிய பல தலங்களில், சென்று சிவத்தைச் சேவித்தார். பாடல் பலவும் பாடினார். அவர் போல் விரக்தி மனத்தா, பலர் அவரைத் தொடர்ந்தனர். பசி ஒரு புறம் பாதித்தது. என்ன செய்வது? சிவத்தைப் பாடும் வாயால், செல்வரைப் பாடவும் நேர்ந்தது.

சிவந்தான் மலைப் பல்லவர் என்று ஒரு பிரபு. அவரைச் சிறப்பித்து, பாடல் ஒன்றைப் பாடினார். மகிழ்ந்தது அவர் மனம். பரிசுகள் பல வழங்கினர். பெற்ற பரிசிலை, ஊன்றித் தன்னைச் சூழ்ந்தார்க்கும் புலவர் உதவினர்.

மலைப் பல்லவர், கவிவளம் கண்டு மகிழ்ந்து, அவர் காதிற்கு இரு கடுக்கனும் இட்டார்.

பல செல்வரைப் பாடி, ஒரு பயனும் அடையாது ஒதுங்கியதும் உண்டு. தென் மாவைக் கறுப்பர் என்ற வள்ளல் ஒருவரை, வாயாரப் பாடினார்; பாட்டிறகு உரிய பயனை யடைந்தார். வல்லை நகர்க் காளத்தி வள்ளலையும் பாடினார்; மாபெரும் பரிசில்கள் பெற்று மகிழ்ந்தார். செங்குன்றையூர்த் தலைவனையும் சிறப்பித்தார்.

அடடே! என்ன என் புத்தி இப்படிப் போகிறதே! என்று வருந்தினார். பரிசில் பெறப் பாடிய பாவம் தீர, இராமேஸ்வரத்தை யடைந்தார். இராமநாதர்மேல் தேவை யுலா என்ற பிரபந்தம் பாடி, விஜயரகுநாத சேதுபதி முன்னிலையில், அரங்கேற்றினார்.

மறுபடியும் மதுரைக்கு வந்தார். சோமசுந்தரர் மேல், மும்மணிக்கோவை எனும் ஒரு பிரபந்தம் பாடினார்.

என்ன பாடியும், என் எண்ணம் நிறைவேற வில்லையே! என்று எண்ணி மனம் கன்னினார்.

குதிக் காலால், ஓங்கி யமனை உதைத்தார். நிலையான கூன் கிமிரும்படி, தேய் தேய் என்று சந்திரனைத் தேய்த்தார். தகுதியுடைய இராவணன் தலைகளை, அழுத்தி நகத்தால் அலறச் செய்தார். முயலகன் உடல் நொறுங்க, இன்றும் மிதித்தபடியே யிருக்கின்றார். இரக்கம் இல்லாத இறைவனை, எததனைப் பாடினால்தான் என்ன பயன்? என்று, கவி யொன்று பாடிக் கதறினார்.

---

மனத்துள் புகுந்து மதிவிளக்கை யேற்றுகின்ற
கனத்த இறைநிலையைக் காண்பதுவும் என்றேயோ

ஒரு நாள், பேயும் உறங்கும் பேரிரவு. கண்ணுறங்குகிறார் கவிஞர் பெருமான்.

பன்னிரண்டு வயது; மங்கல கோல மாது ஒருத்தி, இனிய புன்னகை செய்து எதிர் நின்றாள்.

அம்மா! தாங்கள் யார்?

நான் இருப்பது மதுரை.

அப்படியா! இதுதானே மதுரை! என்ன வேண்டும் தங்கட்கு?

மறந்த பிள்ளையை நினைந்தேன். நினைவூட்ட வந்தேன்; அவ்வளவுதான்! நகை முகமாயினள நங்கை. பளிச்சிட்டது, அவள் மூகத்தில் இருந்த மூக்குத்தி. அந்த ஒளியில், வந்த உருவம் மறைந்தது. திடுக்கிட்டு விழித்தார் கவிஞர்.

ஆஹா! தாயே! அம்பா! மீனாட்சி! தாயை மறந்த தறுதலையாயினேன்! மந்த மதியேனை, மன்னித்துவிடு அம்மா! அம்மா!! என்று அலறினார்.

மைக்கார் குழல்பெண் வடிவாளை, தென்னவன் மாமகளை,
அக்காளை யோன்பங்கில் ஆத்தாளை, மால்தங்கை யானவளை,
திக்கார் தொழும்கயல் கண்ணாளை, ஓர்தினம் சேவைசெய்தால்,
எக்காலமும் அவர் சொர்க்காதி போகத்து இருப்பவரே!

என்று, வாழ்த்திப் பாடியது வாய். அன்று முதல், அல்லும் பகலும், உமையாள் மனுவையே உருவேற்றினார். கலந்து இருந்தவர்க்கும், அதையே கற்பித்தார்.

மற்று ஒரு நாள், விமலதேவி சந்நிதியில் நின்றார். அம்பா! நினைத்தாலே பயம் மீளுகிறதே!

கண்ணில் நெருப்பு; கையில் கனல்; ஏன், திருமேனியே அவர்க்குத் தீவண்ணம். அவரை மணக்க, யாரும் துணிய மாட்டாரே! கிருபா சங்கரி! தாயே! பெயர்க்கு ஏற்ப,

"மணப்பந்தலிலே
தண்டப் பிறையணி சொக்கர் கைத் தாலிக்கு, நீ துணிந்து
கண்டத்தை நீட்டினையே! கூடல் வாழும் கயல் கண்ணியே!

என்று பய வியப் கொண்டு பாடினார்.

மந்திர ஜபம்; தேவி திருவடித் தியானம்; உடனிருந்தார் முன், விமல தேவியின் பிரபாவ விரிவுரை. இப்படியே புனிதமாகச் சென்றது பொழுது.

---

கல்லா மனத்திருளை வாங்கிக் கருணைமிகு
சொல்லாம் உபதேசம் தோன்றுவதும் என்றேயோ

நாள்கள் பல நடந்தன. இறைவி திருவருளை, இருக்கிற போதே பெற வேண்டும்; ஏமாந்து இருந்தால், எமன் வருவானே! வந்தால் என்ன? எனக்கொன்றும் பயமில்லை.

"பண்டோதரிய மறைபாடும் கூடல் பசும் கிளியைக்,
கண்டோகினேன் என் கவலை யெல்லாம், இனிக் காலன் திண்டு
மூண்டோதி வந்திடும் போ(து,)அம்மை கோயிலின் முன்னே
திரியும்
குண்டோதரன் கண்டு கொண்டால், தொடைதட்டிக் கொள்ளுவனே!"

இரக்கம் காட்ட மாட்டாயா? கல்லோ அம்மா நின் திருவுள்ளம்? மலைமகளாகி வந்தவள் அல்லவா! அந்த வாசனையா என்ன? இவ்வுலகியல் வாழ்க்கையில், ஆகாமியம் எப்படியும் வளரும்! அதற்கு இடமில்லாதபடி, இப்போதே என்னைத் திருவருள் நிழலில் இடு; அம்பா! தேவீ!

"பேயல்லவோ ஒருவேளை வரம்தந்து பேசிடும்;கல்
லாய்அல்லவோ, நின்மனம் கெட்டியானது? அற்புதந்தான்;
நீயல்லவோ மதுரேசர் பங்குற்றவள்! நீஎனக்குத
தாயல்லவோ? பிள்ளை நான் அல்லவோ சிவ சாம்பவியே!

என்று பாடிப் பணிந்து பரவினர்.

மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரர் கோயிலில், ஒரு சமயம் பிரமோற்சவம் நடந்தது. சுந்தரர் பவனி சுமுகமாக இருநதது. பார்த்த பக்தாகள், பய பக்தியுடன், ஹாஹர ஒலியை எழுப்பினர். அவர் பக்கத்தில் அன்னை மீனாட்சி. கண்ட மனம் களித்தது.

"ஆனை யுரித்து, அதள்தனைப் போர்த்திட்(டு), அடியும் பட்டு,
மானம் அழிந்(து,) அங்(கு)இரந்தே திரிந்த மதுரைச் சொக்கர்,
ஞானம் மிகப் பெற்று வாழ்வதெல்லாம், சொக்க நாயகியாள்
பானை பிடித்த முகூர்த்தத்தினால் வந்த பாக்கியமே"

என்று பாடினர்; அதைக் கேட்ட தேவி பக்தர்கள், ஆரவாரித்து மகிழ்ந்தனர்.

கனவிலும் நனவிலும், மீனாட்சியார் மூக்குத்தி, மினுக்குவதை நினைத்தார். நெகிழ்ந்தது மனம்.

"பொன்னே! மலையத் துவசனுகிய புயல் ஈன்றெடுத்த
மின்னே! உனது வதனத்தையே, வெண்மதியம் எனத்,
தன்னேயத்தால் ஒருதாரகை யானது, தான்விரும்பி
முன்னே கிடந்து, இனம் பார்க்கின்றதோ முத்து மூக்குத்தியே"

---

தீயில் வெப்பாகித் திகழ்பாகம் செய்கின்ற
தூயவனில் தோய்ந்து துடிப்பறுவ தென்றேயோ

என்று பாடி மகிழ்ந்து பாராட்டினர். அன்பர்கள் அவரைத் திருநெலவேலிக்கு அழைத்தனர். அப்படியே சென்றார். காந்திமதியம்மையை ஆலயத்தில் கண்டார்; கைகுவித்துத் தொழுதார்.

தயாபரி! என்பால் அத்தர்க்கு இரக்கமே யில்லை; அம்பா! இந்த ஏழையைக் குறித்து, அவரிடம் நீ ஒரு வார்த்தை சொன்னால் ஆகாதா? சொல்லும் நேரம் பார்த்து நீ சொன்னால், மாதேவரான ஐயர் அதை மறுப்பாரா? அம்மா!

"ஆய்முத்தும் பந்தரில், மெல்லணைமீ(து,)உன் அருகிருந்து,
நீமூதம் தாஎன்(று) அவர்கொஞ்சும் வேளையில், நித்தநித்தம்
வேய்முத்தரோ(டு,) என்குறைகள் எல்லாம், மெல்லமெல்லச்
சொன்னால்,
வாய் முத்தம் சிந்தி விடுமோ? நெல்வேலி வடிவம்மையே!"

என்றார்.

இப் பாட்டில், புலவர் மனவேதனை புலனாகிறது அல்லவா! மறுநாளே மதுரைக்குப் புறப்பட்டார். ஒன்று எண்ணி ஒன்று பேசும் இந்த உலகில், அநியாயமே செய்யும் அழுக்கான உடலில், துன்பமேயான தொல்லை வாழ்க்கையில், இருக்க விருப்பம் இல்லை. இதுதானே என் பிரார்த்தனை! தேவி!

"மட்டார் குழல் அம்கயல்கண் அம்மே!இம்மட்(டு) என்று,
தொகைக்(கு)
எட்டா(த)எனது துயரம்;நின்பால் சொல்லியே சலிக்க,
ஒட்டாரம் நீசெய்யல் ஆகாது;பார் உன் அடிமை தன்னை!
நட்டாற்றிற் கைவிடாதே! பழி வெகு நாள் நிற்குமே!"

என்று ஓதி உள்ளம் உருகினர்.

ஒரு நாள் எதிர் நின்றார் ஒருவர்.

ஐயா! அருள் உலகம், உம்மை அறியும்; எப்போதும் கண்ணீர் விடுகிறீர்! வீணான கவலையை விடும். பலரை உமது மனதிலேயில் பயிற்றும். அன்னை அருள்வள் என்றார்.

அதை உணர்ந்தார். உண்மை யென்று தெளிந்தார். பலர்க்கு இலக்கியப் பயிற்சி யளித்தார். எங்கும் விமலை பிரபாவ விரிவுரை யாற்றினர். பல இடங்கட்குச் சென்றார், சென்ற இடமெல்லாம், தேவி பஜனை செயச் செய்தார். தூயவர் பலர், அவரை எங்கும் தொடர்ந்தனர். உடன் வந்தார்க்கு, சில சமயம் உணவளிக்கும் பொறுப்பும் உயர்ந்தது. அதற்காக, பிறர் ஆதரவு வேண்டியிருந்தது. அதனாலும் பல தொல்லை. பேசுவதாலும் அயர்ச்சி

---

சந்தைக் குரலுலகச் சார்பகற்றிச் சாந்தமுறு
விந்தையர்கள் சார்பில் விளங்கிநிற்ற லென்றேயோ

பிறந்தது. இதுவும் ஒரு பந்தம். ஏன் இந்தத் தொல்லை? என்ற எண்ணம் எழுந்தது.

ஒரு நாள் இரவு. பதினொரு மணி. பக்கத்தில் ஐம்பது பேர் படுத்திருக்கின்றனர். அவர்கள், அவர் கற்பித்த உமை மனுவை உருவேற்றுபவர்கள்; மெல்ல எழுந்தார். சந்தடி யின்றி நடந்தார். பிறகு ஓடினார். எதிரில் ஒரு மலை யிருந்தது. அதன் உச்சியில் ஏறினார். அங்கு அமர்ந்தார். இறைவி மனுவை எண்ணினார். உளமுகம் ஆயினார். நெடு நேரம் இந்த நிலை.

அளவில்லாத பக்தர்கள், அதோ வருகிறார்கள். கண்டார் அஞ்சினார். கால் வாங்கி ஓடினார்.

ஐயா! இரும் இரும். நாங்களும் வருகிறோம் என்று பல குரல்கள் எழுந்தன.

முடியாது; பலர் நடுவில் பயனில்லை. தனித்திருக்க எண்ணம். எவரை தடுக்காதீர்கள்; ஓடுகிறார். ஓடிக்கொண்டே யிருக்கிறார்.

எதிரில் ஒரு மலை. முகப்பில் ஒரு கோபுரம். கம்பீரமான வாயில் கதவுகள். உள்ளே தேவகானம். அருமைத் தவசிகள் அளவிலர், அங்குச் செல்கின்றனர்.

ஸ்வாமி! இது என்ன இடம்?

இதுதான் கைலாயம்.

உடல் சிலிர்த்தது; உள்ளம் மகிழ்ந்தது.

ஆஹா, கயிலையா! என் தவம் பலித்தது; இனிப் பிறவி யில்லை என்று வீறிட்டார்; வாயிலில் நுழைய விரைந்தார்.

முன்னிருந்த கதவுகள், திடீரென்று மூடப்பட்டன. ஆ! சாத்தியவர்கள் யார்? நான் ஒருவன் நுழைந்து கொள்கிறேன்; தயவு செய்து சிறிது திறவுங்கள்!

பாவிகட்கு இங்கு இடம் இல்லை!

ஆ! யார் பாவி? துவாதசாந்தம் என்னும் மதுரையில் பிறந்த நானா பாவி! வழி வழி யடிமை செய் பழ அடியார் குடிப் பிறந்த நானா பாவி? பயனை கலையுலகில் பயின்றவனா பாவி!

உரைத்தது எல்லாம் உண்மை. ஒவ்வொருவரும், ஒவ்வொரு காரணத்தோடு உலகில் தோன்றுகின்றனர். அந் நியதிப்படி, பலர்க்குப் பரம பக்தி பலிக்க, உலகிற்கு உன்னை அனுப்பியுள்ளோம். உன்னைச் சாரும்படி, பலரை ஊக்கினோம்; அவர்களைக் கைவிட்டு, ஓடி வந்த நீ பாவிதான்!

---

அல்லகன்ற தெய்வ அருளொளியைக் கண்டுமனம்
புல்லி விழுங்கிப் புளகிப்ப தென்றேயோ

இது யார் குரல்?

ஸ்ரீ மீனாட்சியார் ஆணைப்படி, செயல் செய்யும் அதிதேவதை யின் குரல்!

அப்படியா! எம்பெருமாட்டி, என்மேல் சீற்றம் கொண் டாளா? ஓயாது பேசிப் பேசி, உடல் பலவீனம் ஆகிறதே!

காணப்படும் உலகமெலாம், ககன வடிவியின் திருமேனி. காயமே கோயில்; கடிமனம் அடிமை, வாய்மையே தூய்மை; மன மணி யிலிங்கம; நேயமே நெய்யும் பாலும்; நிறைய நீர அமைய ஆட்டல், அகமுகமான ஆராதனை.

ஊன்றி இதனை உணர்ந்தவர்கள், தேவி சந்நிதியைக் காணவும் கருதவும் பிறர்க்குக் கற்பிக்க வேண்டும்! உண்டு சுகித்து உறங்கி, இறப்பதற்கு அல்ல உயிர் வாழ்வு! உத்தம இப் பணியில் உழைத்து உழைத்து, அணு அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து, காயம் ஆகாயம் ஆகும் வரை, வகையான பணி செய்ய வந்தவன் நீ! இதுவே வாழும் ஆன்ம வழி! இதைக் கேட்டதும்,

"தலக்குண்டாகும் புவியிடை, எனக்குண்டாகும் பணியிடை கணக்குண்டு"

என்னும் தெய்வமறை நாதம், நினைவில் எழுந்து நிருத்தம் செய்தது.

தவறு செய்தேன்; மன்னிக்க வேண்டும்! ஆணைப்படி இனி நடக்கிறேன் என்று அலறினார்.

அதிர்ந்தது உலகம். திடுக்கிட்டார் புலவர் அவ்வளவுதான், கண் விழித்தார். குழம்பியது குடர். வெயர்த்தது மேனி. சுற்று முற்றும் நோக்கினார்.

அப்பா! என்ன பயங்கரமான கனவு! இல்லை யில்லை; இது கனவல்ல; தியான காலத்தில், அம்பிகையின் அறிவிப்பு.

உணர்ந்தேன்; உணர்ந்தபடி ஒழுகுவேன்—என்று உரத்துக் கூவினார்.

மலையை விட்டு இறங்கினார். தம்மைத் தேடி வருவாரைக் கண் டார்; அவர்களைக் கட்டித் தழுவினார். அவர்களோடு பல தலங்களை அடைந்தார். பழையபடியே விரிவுரை, பஜனை கீர்த்தனை, தக்கவர் களைச் சந்தித்துத் தனம் தேடல், நலம் சிறக்க மகேச பூஜை நடத் தல்; பொழுது ஒவ்வொன்றையும் இப்படியே போக்கினார். ஒரு சமயம், விரிவாக மாகேச வழிபாடுசெய்ய, ஏராளமாகப் பொருள் வேண்டி யிருந்தது.

---

உண்டெனவும் இல்லெனவும் உண்டில்லை யென்னுமுனைக்
கண்டுவந்து கண்கள் களிப்பதுவும் என்றேயோ

தமிழ் நாட்டில் ஒரு போஜர்; அவர் ஒரு குறுநில மன்னர். ஆம் வாய்மை சிறந்த ஒரு வள்ளல். பொறுமையும் போலித்தன தார், கற்றவர் இடத்தில் இருத்தலை அவர் கண்டார். மனம் கசங் கும், அவர்களைக் காணவும் நாணினர்.

கற்றவர் எவரும், தம்மைக் காண்பது கூடாது என்று, கடும் திட்டம் இட்டார்.

இதை, சொக்கநாதர் அறியார். அடியார்க்குச் சோறளிக்க, வெகுவாகத் தான்யங்கள் வேண்டும், அவ்வளவே அவர் மனநிலை.

வள்ளல் போஜரிடம் வந்தார். வாயில் காவலர் மூலம், அரசர் மனநிலையை அறிந்தார். அப்படியா என்று வருந்தித் திரும்பினர். காலம் பார்த்துக் காத்திருந்தார்.

மற்றொரு நாள், அரசர் வேட்டைக்குப் புறப்பட்டார். அரண் மனை வாயிலைக் கடந்ததும், தேவ தேவி! வீறிட்டது ஒரு குரல். திடுக்கிட்டு வேந்தர் திரும்பினர். விபூதியும் குங்குமமும் நெற்றியில் விளங்குகிறது; கையில் ஒரு திருவோடு; கழுத்திலே உருத்ராட்சம்; எதிரில் ஒருவர் இருக்கிறர்.

யார் நீர்?

பலபட்டடை சொக்கநாத பாவலன்.

என்ன வேண்டும்?

அடியார்க்கு அன்னமளிக்க வசதி வேண்டும்!

எதையும் சிவத்திடம் கேட்பதுதான் முறை. சிவனடியாரான உங்களைப் போன்றவர், எங்களிடம் கை ஏந்தல் இழுக்கு அல்லவா!

என்ன செய்யலாம்! சிவன் செத்து விட்டானே!

என்ன விசித்திரமான பேச்சு! முறை துறந்து பேசாதீர்!

உண்மைதான் சொல்கிறேன். அவர் செல்வமும் கொள்ளை போய்விட்டது.

ஓஹோ; தெரிகிறது! புலவரல்லவா நீர்? பாவலர் எவரும் என் னைப் பார்ப்பது கூடாது என்ற கட்டளையை அறிவீரா?

இன்றுதான் அறிந்தேன். என்னை யிழுத்தது தாங்கள்!

என்ன சொல்கிறீர்? நானு அழைத்தேன்?

---

ஓதுகின்ற நூற்கள் தமை உன்னியுணர்ந் தோதியதில்
கோதகன்ற சாரமதைக் கொண்டுநிற்ற லென்றேயோ

"ஒருபாதி மால்கொள: மற்(று) ஒருபாதி உமையவள் கொண்(டு,)
இருபாதி யாலும் இறந்தான் புராரி; இருநிதியோ,
பெருவாரிதியில்; பிறை,வானில்; சர்ப்பம், பிலத்தில்;கல்ப
தருவான போஜ! கொடை,உன்கை;[(ஓடு)என்கை தந்தனனே!"

மனையாளும் மைத்துனரும், பயனுன திருமேனியைப் பங்கு கொண்டதால், இறந்தார் சிவனார். ஆதரவு இல்லாமையால, கடலில் கலந்துவிட்டாள் கங்கை; வானத்தில் ஓடிவிட்டது பிறை. பாம்பாகிய ஆபரணங்கள், பாதலததில் புகுந்தன கற்பகமான காவலா! கொடையை உன் கையில் கொடுததார்! தன் திருவோட்டை என் கையில் தந்தார் என்ற இப்பாட்டைக் கேட்டதும், போஜர்க்கு நகை பொங்கி வந்தது. புலவர் மனநிலை யறிந்து புளகித்தார். வாரிச் செல்வத்தை அவர்க்கு வழங்கினார்.

அன்பர்கட்கு, பாவலர் சிறக்க அமுதூட்டினார்; அறிவூட்டினார். நாடு முழுதும் நடமாடி, அளவின்றிப் பலரைத் தேவி பக்தர்களாக ஆக்கினார் இத் திருப்பணியால், மாபெரும் ஒளி உள்ளத்தில் மலர்ந்தது. அவர் மேனி, பொன்னாய் மின்னிப் பொலிந்தது. இப் படியே பல காலம் இருந்தார். ஒரு நாள்,

"எப்படி எப்படிச் சொன்னாலும், நான் இரங்கேன் எனவே
அப்படி அப்படி நீ இருக்கின்ற அற்புதத்தை.
இப்படி இப்படி என்றாகிலும், எனக்கே தெரியச்
செப்படி செப்படி யம்மா! மதுரைச் சிவாகந்தியே!"

என்று உள்ளம் உருகி ஓதினார். பசுமை ஒளி, குளுகுளு என்று உலகெலாம் பரவி படர்ந்தது.

தாயே! மீனாட்சி! என்று, பரம நகைமுக மாயினர் பாவலர். அவர் ஆன்மா, அம்மை ஒளி நிழலில் அமைதியை யடைந்தது. ஆனந்தம் கொண்டது.

வாழ்க தேவி தாஸர்கள்!

---

வானவரும் தானவரும் வாழ்த்துகின்ற பல்கோயில்
நானடைந்து வாழும் நலம்பெறுவ தென்றேயோ

# கீதை காட்டும் பாதை

(அ. ராமமூர்த்தி)

## 9. ஸந்நியாஸ தத்துவம்

கீதையின் மூலம் பகவான் உலக மக்களுக்கு புனிதமான ஒரு வாக்குறுதியை அளித்திருக்கிறார். உலகத்தில் எவ்வெப்பொழுது அதர்மம் வலுத்து தர்மத்திற்குக் குறை வேற்படுகிறதோ அவ்வப்பொழுது, தான் அவதரித்து துஷ்ட நிக்ரஹம் செய்து தர்மத்தை ஸ்தாபிப்பேன் என்பது தான் அது. கண்ணன் எந்த நூற்றாண்டில் எந்த உருவத்தோடு தோன்றுகிறான் என்பதை அறுதியிட்டுக் கூற நம்மால் முடியாது. அவதார புருஷர்களையும் சாதுக்களையும் கண்ணனாகவே பாவித்து பக்தி செய்ய வேண்டியது நம்முடைய கடமை. மேலே கூறப்பட்ட வாக்குறுதிக்குப் பிறகு பகவான் அர்ஜுனனுக்கு உத்தமமான சந்நியாஸ யோகத்தை விளக்குகிறார்.

ஆசை, பயம், கோபம் இவற்றால் பாதிக்கப்படாதவர்கள் சாதுக்களாவர். இறைவனைப் பற்றிய ஞானமாகிய தவம் அவர்களைத் தூய்மைப் படுத்துகிறது.

பொதுவாக உலகைத் துறந்தவனே சந்நியாசி என்று அழைக்கப்படுகிறான். கீதையில் கூறப்படும் சந்நியாச தத்துவம் மிகத் தெளிவானது. மனைவி மக்களைத் துறந்து வாழ்க்கையை வெறுத்து வனம் சென்று கந்த மூலாதிகளைப் புசித்து வாழ்வதுதான் சந்நியாசம் என்ற சம்பிரதாயத் துறவை அது அங்கீகரிக்கவில்லை. மனோநாசம்தான் உண்மையான சந்நியாசம். புறச் செயல்களையும் ஈடுபாடுகளையும் எவ்வளவுதான் குறைத்துக் கொண்டாலும் அல்லது ரத்து செய்துகொண்டாலும் அது சந்நியாச மார்க்கமாகிவிடாது. ஒதுங்கியிருந்து வாழ்வது சந்நியாசமாகாது. உலகத்தோடும் ஒன்றுபட்டு, ஆனால் அதே சமயத்தில் பாசபந்தமேதும் இன்றி சமுதாயத்தோடு தாமரையிலைத் தண்ணீரைப்போல் ஒட்டியும் ஒட்டாமலுமிருந்து லட்சிய வாழ்வை மேற்கொள்வதே சந்நியாசமாகும்.

---

தேசுமிகு மேனி திகழும் பெருமானை
ஆசையொடு நாயேன் அணைவதுவும் என்றேயோ

பிச்சைக்காரனுக்கும் சந்நியாசிக்கும் வேறுபாடு உண்டு. பிச்சைக்காரன் பிறரிடமிருந்து எதையாவது எதிர்பார்க்கிறான். சந்நியாசியோ பிறருக்கு எப்பொழுதும் கொடுத்துக் கொண்டிருப்பவன். இல்லறத்தானின் குடும்பம் சிறியது. ஆனால் சந்நியாசியினுடைய குடும்பம் மிகப் பெரியது. ரத்த சம்பந்தமுள்ளவர்களே சாதாரண மனிதனுக்கு உறவினர்கள். துறவிக்கு யாதும் ஊரே! யாவரும் கேளிர்! உலக முழுவதிலுமே அவனுக்கு உறவினர்கள் உளர்!

இறைவனை அடைவதற்கு எதையும் துறக்க வேண்டிய அவசியமே யில்லை; வஸ்து சம்பந்தம் அற்றால் வாஸ்தவப் பொருளைக் காண முடியும் என்பது உண்மையல்ல.

பொருளிலோ போகத்திலோ ஆசை வைப்பது மனம் தான். மனம் உடைய காரணத்தாலேயே நாம் மனிதர்கள் என்று அழைக்கப்படுகிறோம். மனோ நாசமே வஸ்து நாசமாகும்.

மனம் மனிதனை உயர்த்தவோ தாழ்த்தவோ வல்லது. மனிதன் மனத்தால் ஆட்கொள்ளப் படுகிறான். சந்நியாசியோ மனத்தை ஆட்கொள்கிறான்.

மனத்தை அழிக்க முடியாது. அழிக்கவும் வேண்டிய அவசியமில்லை. ஆனால் அதை மடை மாற்றித் திருப்பித் தெய்வீகப் பாதையிலே செலுத்த வேண்டும். மனம் எதைப் பற்றுகிறதோ அல்லது எதில் செலுத்தப்படுகிறதோ அதை நோக்கித் தீவிரமாக வளரும் தன்மை வாய்ந்தது. எனவே மனமாற்றம் மனோ நாசமுமாகலாம்.

காம மார்க்கம் பவித்ரமாக அனுஷ்டிக்கப்பட்டால் அதுவே சந்நியாச மார்க்கமுமாகும். செய்து செயலற்ற நிலையே சந்நியாசமாகும்.

மோட்சத்திலும் கூட இச்சையிருக்கக் கூடாது.

மோட்சம் என்பதற்கு விடுதலையென்பது பொருள். வீடு என்றும் அர்த்தமுண்டு. கீதைக் கண்ணோட்டத்தின் படி மோட்சம் என்பது பெறவேண்டிய ஒன்றைப் பெறுவது என்பதேயாகும்.

கர்மம், கர்மமின்மை எது என்பது பற்றிய சர்ச்சை நமக்குத் தேவையில்லை. எதை அறிந்தால் தீமையினின்று

---

பாரில் நல்லாரிற் பழகி யவர்போற்றும்
சீரிற் சிறந்திறையைச் சேர்வதுவும் என்றேயோ

விடுபடுவோமோ அதுதான் மேலான கருமமாகும். செய்ய வேண்டியதை மட்டுமே செய்து அடைய வேண்டியதை அடைய விழைவது சந்நியாச யோகமாகும். உண்மையான சந்நியாசி உலகிற்காக செய்ய வெண்டியவை அனைத்தும் செய்யத் தயங்க மாட்டான்.

சங்கல்பமற்ற அறிவே—சலனமற்ற புத்தியே பாண்டித்யமாகும். அத்தகைய பாண்டித்யமுடையவனே சந்நியாசியாவான்.

புலன்களை அடக்கி ஆள முடியாது. அவற்றை இயக்கித்தான் ஆள வேண்டும். அத்தகைய இயக்கத்தைப் புலன்களுக்குத் தருவதற்கு ஏற்றவன் சந்நியாசி.

சர்வத்தையும் நாசம் செய்தவன் சந்நியாசி. சர்வத்தையும் தன்னுள்ளே அடக்கிக் கொண்டிருக்கிற சதாசிவனையே சந்நியாசி சதா காலமும் பார்த்துக் கொண்டிருப்பதால், ஏனைய சர்வத்தையும் அவன் நாசம் செய்தவனாகி விடுகிறான்.

சந்நியாசி தானாகவே எதையும் துறப்பதில்லை. துறவு தானாகவே அவனை வந்து அடைகிறது.

எதையும் துறப்பது சந்நியாசமாகாது. எல்லாவற்றையும் உண்மையான பரம்பொருளின் அம்சமாக மேற்கொள்வதுதான் சந்நியாசமாகும்.

வீடு வாசல், மனைவி மக்கள், சுற்றம், செல்வம், பதவி இவற்றோடு வாழ்ந்து வரும் ஒருவன் சந்நியாசியாக இருக்கவும் முடியும். ஏதுமற்றவன் பெரிய சம்சாரியாக இருக்கவும் முடியும். வாஸ்தவத்தில் சந்நியாசம் என்பது உடைமைகளையோ அவற்றின் இன்மையையோ பொறுத்ததல்ல. மனதைப் பொறுத்ததேயாகும்.

சகல சுகபோகங்களோடும் வாழ்ந்த கண்ணபிரான் நித்யமான சந்நியாசி யல்லவா?

நன்மை—தீமை, விருப்பு—வெறுப்பு, சுகம்—துக்கம் போன்ற இருவிதத் தன்மைகள் அற்றவனும், என்றும் திருப்தியை உடையவனும், பந்தமற்றவனும்—ஆனால் பரம்பொருளிடத்தில் நிலைத்த புத்தியை உடையவனும், வெற்றி தோல்வியைக் குறித்த சிந்தனை யில்லாதவனும், செய

ஈரில் சிவலோகம் எய்தி யடியார்களுடன்
நேரில் வணங்கிவழி நிற்பதுவும் என்றேயோ

லாளனும், அதே சமயத்தில் செயலற்றவனும் ஆகிய சந்நியாசியினுடைய இலட்சணத்தைக் கூறுவதற்கு பாஷை வலிமையற்றது.

சந்நியாசத்தை சொல்லித் தெரிவிக்க முடியாது. உணர்ந்து தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

மனத்தின் சரியான மடை மாற்றமே மனோநாசம் என்று உணர்ந்து, அந்த மனோ நாசத்தைப் பெற்றவனே சர்வத்தையும் நாசம் செய்த சந்நியாசி.

(தொடரும்.)

---

# பக்தியின் சக்தி

(ஆ. கி. ரங்கராஜன்)

பாமரனையும் பரமனுக்குகிறதாம் பக்தியின் சக்தி. இதை முன்பே கண்டோம். அவ்வாறு ஆக்குவதற்கு முன் பாமரனின் நிலை வேறு. பரமனின் நிலை வேறு. பாமரனுக்குப் பக்தியை ஊட்டுவது இறைவனின் கடமையாம். அப் பக்தி பண்படும்போது பாமரன் தன்னிடம் இறைவன் வதிவதைக் காண்கிறான். இதுவே பதி ஞானமாகும். இந்த எல்லையைக் கண்டவர் இன்பத்தில் ஆழ்ந்திருப்பர். எதிலும் பற்றற்று விளங்குவர். கருணையே வடிவமாய்த் திகழ்வர். ஜனன மரணச் சஞ்சலங்கள் அவரைக் கட்டுப் படுத்த மாட்டா.

இவ்வாறு முதலில் பாமரனாய் இருந்து பின் பரமனும் போற்றும் திறலைப் பெற்றவர் அனுமனேயாம். அனுமன் வாயுபுத்ரனாய் இருப்பினும், ஆதவனிடம் கலை பயின்ற போதிலும், விசுவரூபம் எடுக்கும் விசித்திர பயங்கர புருஷனாய் விளங்கினும், சாபமொன்றின் காரணமாகத் தன் வலிமை மறந்து செயலிழந்து தவித்துக் கொண்டிருந்தனன்.

நல்லோரை ஆதரிக்கவும் தீயோரைத் தண்டிக்கவும், தர்மத்தை நிலை நாட்டவும் சாதுக்களுக்குத் தரிசனமளிக்கவும், சாபங்களால் உழல்வோருக்கு விமோசனமளிக்கவும்

---

நல்லார் பலர்வணங்கும் நாயகமாம் வேலோனைப்
புல்லி மகிழ்ந்து புனிதமுற லென்றேயோ

ஒவ்வொரு யுகத்திலும் அவதரிக்கும் அச்சுதன், அயோத்தி வேந்தனும் தசரதன் மைந்தனுய் ஸ்ரீராமனென்னும் பெயருடன் அவதரித்தனன்.

விசுவாமித்ரருடன் சென்று தாடகையையும் சுபாகுவையும் ஸம்ஹரித்து, காரிகையாம் அகலிகையின் சாபத்தைத் தவிர்த்து, மிதிலையில் சிவதனுஸை ஒடித்து சீதையை மணந்து, பின் பரசுராமரின் தேஜஸை ஸ்வீகரித்து, அயோத்தி சேர்ந்தனன். தந்தை சொல்லைக் காக்கவும் தானவர்களை மடிக்கவும் ஆரண்யத்தில் பிரவேசித்தனன். அறிவற்ற அரக்கனும் தசமுகன், அச்சுதனின் அடிபணிந்து அருள் பெற நினையாது அன்னையாம் சீதையைக் கவர்ந்தனன். இது அறியாமையன்றோ? நிற்க.

இறைவனும் இராமனை சேவித்த உடனேயே அனுமன் தனது பேராற்றலை மீண்டும் எய்தினன். இராமன் அனுமனுக்குப் பரிபூரண அருளை ஈந்தனன். அனுமனோ இராமனைத் தன் இதயத்தினுள் வைத்துப் பூஜித்தான். அனுமன் இராம பக்தியின் காரணமாக அடைந்த வலிமை மிக அபாரமாகும்.

அறியாமையின் கொடுமையால் அரக்கன் தசமுகன் அச்சுதனின் கணையால் மாய்ந்தான். அறிவின் உயர்வால் அனுமன் உய்ந்தான். அவனுடைய பக்தியின் சக்தியை உலகுக்கு அறிவிக்க நாரத முனிவர் தருணம் பார்த்திருந்தார்.

இறைவன் இராகவன் அவனியில் மானிடனுய் அயோத்தி வேந்தனுய் அரசோச்சும் காலே, சப்த ரிஷிகள் வனத்தினூடு எங்கோ சென்று கொண்டிருந்தனர். அது போது காசி ராஜ்யத்தை ஆண்ட ஜயந்த மன்னன் அவர்களைத் தரிசித்துப் பயபக்தி விசுவாசமாக சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து "வசிஷ்டாதி சப்த ரிஷிகளுக்கும் என் நமஸ்காரம்" என வணங்கி நின்றான். இவ்வார்த்தையைக் கேட்டவுடனே முனிவர்களுள் ஒருவரான விசுவாமித்ரருக்குப் பொறாமையும் சினமும் பொங்கி எழுந்தது.

"ஜயந்தனே! உனக்கு என்ன அவ்வளவு மமதை! நாடாளும் வேந்தன் என்ற கர்வத்தினுல் என்னை அவ-

கெட்ட பழக்கமது கேடுதரும் என்றுன்னி
விட்டார் திருவடியை மேவுவதும் என்றேயோ

மதிக்கத் துணிந்தனையோ? எனது பெயரே உரையாமல் மற்றொருவர் பெயரை உரைக்க உனது செருக்குதான் என்ன? ஒருவகையில் நான் உனது மூதாதை ஆவேன் என்பதை அறிந்திருந்தும், பொதுவாக எவரது பெயரையும் உரையாமல் நமஸ்கரிப்பதைவிட்டு, வேறொருவர் பெயரைக் கூறி என்னை அவமதித்தாய்! இதோ சாபம்! இன்று முதல் ஏழாவது நாள் உனது சிரம் எனது பாதங்களில் உருளட்டும்'' என சபித்தார்.

ஜயந்தன் மனம் வருந்தி "ஸ்வாமீ! நான் யாதொன்றும் வேற்றுமையின்றிப் பணிந்தேனே தவிர என்மீது எந்தக் குற்றமுமில்லை. தங்களை இகழ வேண்டுமென்ற எண்ணமே சிறிதுகூட என் மனதில் எழவில்லை. என்னை மன்னிக்க வேண்டும்" என இறைஞ்சினன்.

இட்ட சாபத்தை மாற்ற முடியாதென விசுவாமித்ரர் கூறி விரைவாகச் சென்றார். ஜயந்தன் இறைவனை நினைந்து தன் கதி இவ்வாறாகவா முடிய வேணடும்? எனத் துயருற்றான். முக்காலமும் உணரும் முனிவரான நாரத பகவான், கோசிக முனிவரின் கர்வத்தை அடக்குவதற்கும், அனுமனுடைய பக்தியின் சக்தியை அகிலத்திற்கு அறிவிக்கவும், இராமன் நீதி வழுவாதவன் என்பதை நிரூபிக்கவும் இச்சமயத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கருதி ஜயந்தன் முன் தோன்றினர்.

"காசி மன்னா! ஏன் கவலைப்படுகிறாய்?'' என வினவ, அவன் நிகழ்ந்ததை நவின்றனன். நாரத முனிவர், "நீ எதற்கும் கலங்காதே! வாயுலோகம் சென்று அஞ்சனா தேவியிடம் சரணடைந்து உயிர் பிச்சை வேண்டுமெனக் கேள். வரமளித்த பின் யான் அங்கு வந்து வேண்டிய உதவிகளைச் செய்கிறேன்'' என்று கூறி, வாயுலோகம் செல்வதற்குத் தகுந்த வலிமையைத் தரும் மந்திரமொன்றை உபதேசித்துச் சென்றார். அதை ஜபித்து ஏற்ற ஆற்றல் பெற்ற ஜயந்த மன்னன் வாயுலோகம் சேர்ந்து, அஞ்சனா தேவியின் பாதங்களில் நமஸ்கரித்து அன்னையே! எனக்கு உயிர்ப் பிச்சை அளிக்க வேண்டும்'' எனக் கேட்க "அளித்தேன்! அஞ்சாதே'' என அபயமளித்தனள் அஞ்சனை.

---

**கொட்டிக்கைத் தாளம் குமரகுக என்பாருள்**
**ஒட்டியவர் நிழலில் உறுவதுவும் என்றேயோ**

சினம் தன் செயலழிக்கும் என்பதை அறிந்திருந்தும் தன்னைத் திருத்திச் சினத்தைத் தணித்துக் கொள்ள இயலாத கோசிக முனிவர் தனது வலிமையை ஆத்திரத்தில் மறந்து இட்ட சாபத்தை எவ்வாறு நிறைவேற்றுவது என ஆலோசனையில் புகுந்தார். இதுவே சமயமென யாழ் முனிவர் அங்கு தோன்றினர். வரவேற்ற கோசிக முனிவ ரிடம் "தாங்கள் யோசிக்கும் விஷயமென்ன?" என வினவ, அவர் தமது கருத்தை உரைக்க, நாரத முனிவர் நகைத்து, "இதுதானு பிரமாதம்? உமது சிஷ்யரும் அகில லோக நாதனுமான அயோத்தி மன்னர் இருக்கிறுரே இராம பிரான், அவரிடம் கூறினுல் போதுமே! அடுத்த கணமே உம் இஷ்டம் எல்லாம் சித்தியாகும்" என்று கூறி மறைந் தார்.

வாயுலோகம் சென்று அஞ்சனுதேவியிடம் ஜயந்தனின் சாபத்தை விளக்கி இருவரையும் அனுமனிடம் சரணடையு மாறு யோசனை கூறினர். அஞ்சனுதேவி தன் மைந்தனை நினைக்க அனுமனும் வந்து விசாரிக்க நாரத முனிவரின் யோசனைப்படி அவர்கள் இருவரும் தஞ்சமடைய அனுமன் காப்பாற்றுவதாக உத்தரவாத மளித்தான். நாரத முனிவர் தோன்றி கோசிக முனிவர் ஜயந்தனுக்கு இட்ட சாபத்தை யும், அம்முனிவர் இராமனிடம் முறையிடச் சென்றதையும் எடுத்துரைத்து ஜயந்தனை எவ்வாறேனும் காப்பாற்றியே ஆக வேண்டுமென்று கூறி, "உனது பக்தி உன்னை உயர்த்தும்" என்று உரைத்து மறைந்தார். அனுமன் மன முடைந்தான். தனது இறைவனுகிய காகுஸ்தனையே எவ்வாறு எதிர்ப்பது? எதிர்த்தால் வெல்ல முடியுமா? அவனது சேவை கண்ட பின்தானே விஸ்வரூபமெடுக்கும் சக்தியை மீண்டும் பெறநேர்ந்தது! நித்தியத்துவம் அளித்த இறைவனையே எதிர்ப்பதாயின், அதைவிடத் துரோகச் செயல் என்ன உளது? அப்படி இல்லையேல் ஜயந்தனைக் காப்பாற்றுவதாகக் கொடுத்த வாக்கை மீறுதலும் அதரும மல்லவா?

இவ்வாறெல்லாம் யோசித்த அனுமன் இறுதியில் ஜயந்தனைக் காப்பாற்றத் தன் உயிரையே கருணை வள்ள

மலையாய் வளர்ந்துவினை மயங்கச்செய் யாமல்
அலையா யருள்வந் தகப்படுத்த லென்றேயோ

லாகிய காகுஸ்தனின் கணைக்குத் தியாகம் செய்யத் துணிந் தான். இராமனை எதிர்ப்பதில்லை என்றும் உறுதி பூண்டான்.

இது இவ்வாறு ஆக, கோசிக முனிவர் அச்சுதனை அணுகித் தம் கருத்தை அறிவித்தார். இராமபிரான் எதற் காக ஜயந்தனைக் கொல்ல வேண்டுமெனக் கேட்க, "நான் உனது குரு. நீ என்னைக் காரணம் கேட்பது சரியல்ல. என் கோரிக்கையை நிறைவேற்றுதல் உன் கடமை" என்று ஆணையிட்டுச் சென்றார். உடனே நாரத முனிவர் தோன்றி ஜயந்தன் மாருதியிடம் அடைக்கலம் புகுந்துள் ளான் என்று அறிவித்தார். திடுக்கிட்ட இராமன் தனக்கு ஆஞ்சநேயன் செய்த உதவிகளை நினைந்து உருகினன்.

நாரத முனிவர் கயிலை சென்று "திரிபுராந்தக! அயோத்தியை ஆளும் ரவிகுல வேந்தன் அறத்தைப் புறக் கணித்து அநீதியில் பிரவேசிக்கத் துணிந்துவிட்டான்! தனது பக்தனை மாருதியைக் கொல்ல முடிவு செய்து விட்டான்! சொன்ன சொல்லை மறந்து, நித்தியத்துவம் அளித்த வாக்கைக் காற்றில் பறக்க விட்டு விட்டான்! நீதியை நிலைநாட்டத் தோன்றிய இராகவன் அக்ரம வழி களில் பிரவேசிக்க நிச்சயித்துவிட்டான்!" எனக் கூற, எரி நேத்ரனும் "அவ்வாறு இராமன் எண்ணினால் யாம் அதனைத் தடுப்போம், அஞ்சற்க. மாருதியைக் காக்க அது போது ஆங்கு எழுந்தருளுவோம்" என வாக்களித்தனன்.

கோசிகர் சாப இறுதி நாள் வர ரகுராமன் அனுமனை எதிர்க்க ஆயத்தமாயினன். அஞ்சனை புத்ரனும் ஜயந்தனை நடுவில் அமர்த்தி அவனைச் சுற்றித் தன் வாலினால் வளைத்து அடிமுடி தோன்றாமல் மறைத்து முன்பாக பத்மாசனத்தில் அமர்ந்து தாரக மந்திரத்தை ஜபித்தவண்ணம் உட்கார்ந்து விட்டான். புருஷோத்தமனாகிய இராமன் தனது சோதரர் களை அனுமனிடம் சென்று ஜயந்தனை வெளியில் விடுமாறு வேண்டி அவன் இசையாவிடில் அவன்மீது போர் தொடுக்குமாறு கட்டளை இட, அவர்கள் ஒவ்வொருவரும் மாருதியினால் ஏற்பட்ட அனுகூலங்களையும், தசமுகனோடு நடத்திய போரில் அவன் செய்த உதவிகளையும் எடுத்

தீயமலம் வீயவினை தெய்வ நினைவெழுந்து
நேயமுடன் ஈர்த்தென்னை நிலைப்பிப்ப தென்றேயோ

துரைத்து அவற்றிற்கு மகிழ்ந்தே சாகா வரம் அளித்ததையும் நினைவூட்டி எவரும் ஆஞ்சநேயனை எதிர்க்க இயலாதென மறுதலித்தனர்.

கோசலை புத்ரன் மனம் தளர்ந்து "இதுகாறும் ரவி குலம் சொல் தவறுமையால் உயர்ந்த கீர்த்தியுடன் விளங்கியது. இன்று 'அக்குலம் என்னை முதலாகக் கொண்டு பிழைபட்டு விட்டது. அன்பனுக்கு அளித்த வாக்கை மீறுவதா? ஆசிரியர் (கோசிகர்) அளித்த ஆணையை மீறுவதா? இரண்டுமே அநீதி! நான் நீதி தவறினாலும் மூத்தவனின் உத்தரவை மீறுதல் என்னும் விஷயத்தைச் சகோதரர்களாகிய நீங்கள் கையாளத் தொடங்குகிறீர்கள். இராமன் சொல் தவறினான் என்ற இகழ்ச்சி வேண்டாம். என் உயிரைத் தியாகம் செய்கிறேன்" என்று கூறித் தன் உடைவாளை உருவ நாரதரும் இதரரும் தடுத்துப் பரதன் முதலியோருக்கு மேலான நீதிகளைக் கூறினர். அதன்பின் சத்ருக்னன் போர்க்கோலம் பூண்டு மாருதியிடம் சென்றான். பல நல்லுரை கூறி ஜயந்தனை விடுவிக்குமாறு கூறியும் அனுமன் பதில் பேசாததால் சினந்து கணை தொடுத்துப் பாணங்களை அவன்மீது பொழிய அவை பயன்படாமல் போயின. இறுதியில சத்ருக்னன் மூர்ச்சித்தான்; அவனுக்கு உதவியாக பரதனும் பின் இலக்குமணனும் அனுமனை எதிர்த்து மூர்ச்சையாயினர். அனுமன் ஜபிக்கும் தாரக மந்திரத்தின் சக்தி மிகவும் ஒளிபெற்று அவன்மீது எவ்விதத் தாக்குதலும் அணுகாதபடி தடுத்தது.

செய்தி யறிந்த இராகவன் சிந்தை நொந்து விஜய மாருதியின் எதிரே கோதண்டம் தாங்கி நின்றான். "ஆஞ்சநேய! ஜயந்தனை விட்டு விடு. என்னை எதிர்த்தல் அநீதி. யான் உன்மீது போர் தொடுத்தல் அதைவிட அநீதி. இந்த இரண்டும் வேண்டாம். வெளியில் அவனை விடு" எனக் கூற அனுமன் பேசவில்லை. அச்சுதன் பின்னர் கணை எறியத் தலைப்பட்டும் அவனது நிஷ்டை கலையவில்லை. இறைவன் தொண்டரின் உள்ளத்தில் ஒடுக்கமாதலால், வெளியுருவத் தோற்றமாய் நின்றவனால் பக்தனை ஏதும் சோதிக்க இயலவில்லை.

---

காலத்திற் சாதனைகள் கண்ணனுங் கருத்துமுறச்
சிலமுடன் ஏற்றுச் சிவமாவ தென்றேயோ

இறுதியாக ரகுநந்தனன் "ஆஞ்சநேய! எனது குருவின் கட்டளையை நிறைவேற்ற உனக்களித்திருக்கும் வரத்தை, மீட்டுக்கொள்கிறேன். இனி உனது சிரம் துண்டிக்கப் படும்" என்று கூறி தனது பெயர் கொண்ட ராம பாணத்தை எடுத்தான். அவ்வேளையில் சிவபிரான் அங்கு தோன்றி "இராமச்சந்திர! அநீதியில் பிரவேசிப்பதாயின் என்னை வெல்க! பின்பே அனுமனை எதிர்க்கலாம்" எனக் கூறித் தனது வில்லை வளைத்துப் பாசுபதத்தை எடுத்தனன். உலகம் அதிர்ந்தது. கோள்கள் தடுமாற, கடல்கள் பொங்க, அமரரும் அவனியோரும் அஞ்சி நடுங்கினர்.

சமயம் கருதிய நாரதர் மாருதியை அழைத்து ஜயந்தனை வெளியில் விடுமாறு கூறி, அவனை நதிக்கரையில் அனுஷ்டானங்கள் செய்யும் கோசிக முனிவரின் பாதங்களில் தலை படுமாறு விழுந்து வணங்கும்படி கூறினார். அவன் அவ்வாறே செய்ய, நாரதர் அங்கு தோன்றி, "கோசிக முனிவரே! உம்முடைய செயலால் உலகம் அழியப் போகிறது. அரவாபரணனும் அச்சுதனும் போர் தொடங்கி விட்டனர். உமக்குப் பழி வேண்டாம். இப்போது உம் முடைய சாபப்படி ஜயந்தன் சிரம் உம்முடைய பாதங் களில் பட்டுவிட்டது. நீர் உடனே சென்று போரைத் தடுக்க வேண்டும்" என ஆவேசமாகக் கூற, விசுவாமித்ரரும் பயந்து ஓடோடிச் சென்று, "போரை நிறுத்துங்கள், என் சாபம் நிறைவேறியது" என்று உரைக்க, சிவபிரானும் ஸ்ரீராமனும் யுத்தத்தை நிறுத்தினர். யாழ் முனிவர் அங்கு வந்து நடந்தவற்றை நவின்றார். அனைவரும் மகிழ்ந்து அயோத்தி சென்றனர். ஆஞ்சநேயன் அச்சுதனின் அடி பணிந்தனன். "ஆஞ்சநேய! உனது இறைவனையே நீ எதிர்க்கும் அளவிற்கு எவரிடம் வலிமை பெற்றனை?" என சீதா பிராட்டி வினவினள்.

ஆஞ்சநேயன் கூறினான்: "தாயே! யான் என் இறை வனை எதிர்க்கவில்லை. என் இதயத்தில் வைத்துப் பூஜித் தேன். எவரும் அதை அறிந்திலர். யான் எதிர்த்திருந்தால் இறைவன் அளித்திருந்த நித்யத்வம் நிர்மூலமாகி யிருக்கும்! அன்பே உருவான தங்களையும் அருளே உருவான அச்சுத

---

சார்ந்தவணம் ஆகும் சதுரப்பா டென்றுணர்ந்து
வார்ந்து சிவத்தை மனங்கோடல் என்றேயோ

ணையும் என் அகத்தில் விளங்குவதைத் தாங்களே பாருங்கள்" எனத் தன் மார்பைக் கிழித்தான். என்ன ஆச்சரியம்! 'கனகமயாசனத்தில் ஜனககுமாரியொடு, புனித மகுடமணியும் தினகர குலதிலகன்' விளங்குவதை அனைவரும் கண்டனர்.

வசிஷ்டர் மகிழ்ந்து கூறினர்: வாயுபுத்ரா! உனது பக்தியே உன்னைக் காப்பாற்றியது! உனது பக்தியே ஜயந்தனைப் பாதுகாத்தது! உனது பக்தியே கோசிகரின் அகந்தையை வென்றது! உனது பக்தியே தர்மத்தை நிலை நாட்டியது. பக்தியினால் எதையும் சாதிக்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டாய்! உன்னிடம் இறைவன் இராமன் உறைவதால் உன்னைப் பணிந்தவர் இராமனைப் பணிந்தவர் ஆகுக! அவர்க்கு அச்சுதனின் அபாரமாகிய அருள் கிட்டுவதாக!" என ஆசீர்வதித்தார். அனைவரும் தத்தம் இருப்பிடமேகினர்.

பக்தியின் சக்தியால் பாரகம் உயர்க!

---

அநுபூதி விளக்கம்-

# நிலமும் பசியும்

(கி. வா. ஜ.)

ஒருவன் பசியினால் அல்லற்பட்டு வாடினன், அப்போது ஒருவர் அவனுக்கு வேண்டிய உணவைக் கொடுத்தார். அவன் பசி சிறு பசிதான். ஒரு கைப்பிடிச் சோறு கொடுத்த அளவிலே அது ஆறிவிட்டது. தனக்குப் பசியைப் போக்கின பெருமாள் எத்தகையவர் என்பதை அவன் ஆராய்ந்தான். யார் யார் பசித்து நிற்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் உணவு தந்து அப்பசிப்பிணியைத் தீர்க்கும் மருத்துவராக விளங்குகிறவர் என்பதை அவன் உணர்ந்தான்.

"அவரா? அன்று எங்கள் ஊருக்கு வந்தார். ஏழைகள் பசியால் வாடுவதை அறிந்தார். எல்லோரையும் அழைத்து யாவருக்கும் வயிறு நிறையும்படி வெண்பொங்கலும் சர்க்

---

தேர்ந்த அநுபவத்தால் தெய்வகுகா என்பாரை
நேர்ந்து வழியறிந்து நிலைத்திருப்ப தென்றேயோ

கரைப் பொங்கலும் வழங்கினார்" என்று ஒருவர் சொன்னார். அதை அவன் கேட்டு வியந்தான்.

வேறு ஒருவர் இன்னும் அதிசயமான செய்தியைச் சொன்னார். "எங்கள் பகுதியில் புயல் அடித்து மக்கள் வீடு இழந்து திண்டாடினார்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் மாதக்கணக்கில் சாப்பாடு போட்டார். எல்லோருக்கும் ஆடைவாங்கி அளித்தார். வீடும் கட்டித்தந்தார்" என்று அவர் கூறியதைக் கேட்டு அவன் மயங்கினான்.

அவனுக்கு ஒருநாள் மாத்திரமா பசிதீர்த்தார்? அடுத்த நாளும் வந்து உணவுதந்தார். அதோடு நிற்கவில்லை. ஒரு மூட்டை அரிசி வாங்கிக் கொடுத்து, "இந்தா, இதை வாங்கிக்கொள். தினந்தோறும் சமைத்துச் சாப்பிடு. இது இரண்டு மாதத்துக்கு வரும்" என்று சொல்லிப் போனார். சமைத்த உணவைச் சாப்பிட்ட அவனுக்குச் சமைக்கும் வழியையும் சொல்லித்தந்தார். அவன் ஓரிரண்டுநாள் சமைத்துச் சாப்பிட்டான் சோம்பல் வந்துவிட்டது. பசி வந்தபோது ஏதோ பொங்கி உண்டான்.

அந்த இரண்டு மாதங்கள் கழிந்தவுடன் அந்த உபகாரி வந்தார். "இந்தா, அப்பா; இனி உனக்குச் சோறு இல்லையே என்ற கவலை வேண்டாம். இனி மேல் நீ என்னை எதிர்பார்க்கவும் வேண்டாம். உனக்குப் போதிய அளவுக்கு நிலம் தருகிறேன். அதில் வேளாண்மை செய்து பயிரிட்டு நெல் விளைத்து அரிசியாக்கிச் சமைத்து உண்டு வாழ். இனி மேல் யார் கையையும் எதிர்பார்க்க வேண்டாம். நீயே உனக்கு ராஜா" என்று சொல்லி நிலத்தையும் வழங்கிப் போய்விட்டார்.

சமைத்த சோறு சாப்பிட்ட சோம்பேறி நிலத்தை வாங்கிக் கொண்டானே ஒழிய அதில் உழ முற்படவில்லை. உழும் தொழிலின் நுணுக்கங்களையும் அவர் சொல்லித் தந்தார். ஆயினும் அவன் மெய் வருந்தி உழைக்கும் உணர்வு பெறவில்லை. அவனுக்குப் பசி எடுத்தது. விரிந்த நிலப்பரப்பு இருந்தும், அவனுக்குப் பகையாகச் சோம்பல் இருந்து தடுத்ததனால் அவன் அந்த நிலத்தைப் பயன் படுத்திக் கொள்ளவில்லை. பசியினால் அவதியுற்றான்.

---

**பொல்லாத வாசனைகள் போக வழிகாட்டும்**
**நல்லாரைச் சார்ந்து நலமுறுவ தென்றேயோ**

பசி மிகவும் கடுமையாக இருந்தது. அப்போது அவனுக்கு அந்தப் பரம உபகாரியின் நினைவு வந்தது. "நான் என்ன காரியம் செய்தேன்! பலருக்குப் பெரும் பசியைத் தீர்த்து அருள் செய்யும் வள்ளலுடைய அன்பு எனக்குக் கிடைத்தது. அவர் எனக்குச் சோறு தந்தார்; அரிசி தந்தார்; நிலமும் தந்தார். நிலத்தைக் காட்டி அதில் உழுது பயிரிட்டுப் பிழைக்கும் வழியையும் காட்டித் தந்தார். அப்படியிருந்தும் நான் அவர் கூறியவற்றை உணர்ந்து பயன் அடையாமல் பசியினுல் வாடித் தவிக்கிறேனே! நிலம் இல்லாத வறியவர்கள் பசியினுல் வாடுகிருர்கள். அவர்களுக்கு அரிசியும் இல்லே; நிலமும் இல்லே. அதனுல் அவர்கள் பசியால் வருந்தக் காரணம் இருக்கிறது. நானே அப்பெருமான் அளித்த நிலத்தை வைத்திருக்கிறேன். அவர் காட்டிய வழிகள் எனக்குத் தெரியும். அப்படி இருந்தும் அந்த ஏழைகள் படுகிற பாட்டையே படுகிறேனே! சோம்பலின் வாய்ப்பட்டுக் கிடக்கிறேனே" என்று வருந்திஞன்.

அவன் வருந்தியதைப் போல அருணகிரிநாதர் அநுபூதியில் ஒரு பாடலேப் பாடியிருக்கிருர்.

"பெரிய தடைகளேயெல்லாம் போக்கி அருள்பாலிக்கும் முருகப் பெருமான், எனக்கு என் துயரங்களேயெல்லாம் போக்கிக் கொள்ளும் நுட்பத்தை உபதேசம் செய்தும் நான் சாமானிய மக்களேப் போலத் துன்புற்று உழலுகிறேனே!" என்ற கருத்துப் பொதிந்தது அந்தப் பாடல்.

> மகமாயை களைந்திட வல்லபிரான்
> முகம்ஆறும் மொழிந்தும் ஒழிந்திலனே
> அகம்மாடை மடந்தையர் என்றயரும்
> சகமாயையுள் நின்று தயங்குவதே!

'மகாமாயையைக் களைந்து யாவருக்கும் இன்பத்தைத் தரவல்ல உபகாரியாகிய முருகன் தன்னுடைய திருமுகங்கள் ஆறின் தத்துவத்தையும் எனக்குத் திருவாய் மலர்ந்தும் அதனை உணர்ந்து உய்திபெற முயலாமல், வீடு, பொன், பெண்டிர் என்று ஆசைப்பட்டு, செய்ய வேண்டியதைச்

செய்யாமல் சோர்ந்து நிற்பதற்குக் காரணமான சக மாயைக்குள் நீங்காமல் நின்று கலக்கம் அடைவதை இன்னும் ஒழியவில்லையே' என்பது இதன் பிண்டப் பொருள். இனி இப்பாடலை ஊன்றி நோக்குவோம்!

---

## மதிப்புரை

### கந்தர் அலங்கார விரிவுரைகள்

ஆசிரியர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதையர் அவர்கள்; கிடைக்கும் இடம்:—அமுத நிலையம், தேனாம்பேட்டை, மவுண்ட் ரோட், சென்னை.

கற்றவர் சிந்தனையில் ஊறுகின்ற செய்திகளை, மற்றவரும் உணர்ந்து, வாழ வழி செய்வார் வையத்து வாழ் வாங்கு வாழ்பவர்கள். அந்த வரிசையில் ஒருவர் ஸ்ரீ ஸ்ரீகண்டையர் அவர்கள்.

கி. வா. ஜ அவர்களின் கந்தர் அலங்கார விரிவுரைகளை, அமுத நிலைய சார்பில் பதித்து வெளியிடும் அவர் முயற்சியை, பொன் போல் எவரும் எதிர்காலத்தில் போற்றுவர்.

(1) அலங்காரம். (2) குறிஞ்சிக் கிழவன். (4) ஆனந்தத் தேன். (4) வாழ்க்கைக் கூத்து. (5) மரணம் இல்லா வாழ்வு. (6) காலையும் மாலையும் எனும் ஆறு தலைப்பில் விரிவுரைகள், ஆறு புத்தகங்களாகி யிருக்கின்றன.

ஒவ்வொன்றிலும் இலக்கிய நுட்பம், இலக்கணக் குறிப்பு, சித்தாந்த மரபு, பிரயோக நுட்பம், மற்றவர் உட்கிடை, உலக அனுபவம் முதலியன, பொங்கிக் கடல் போல் பொலிந்து, கி. வா. ஜ அவர்கள் முருகன்பால் கொண்டுள்ள இதய பக்தியை நினைவுறுத்துகின்றன.

ஒவ்வொரு புத்தகமும் விலை ரூபாய் இரண்டுதான். காலத்தில் மலரும் மலர்களான இவைகளை, பக்தர்கள் வாங்கிப் படித்துணர்ந்து பயனடையும்படி வேண்டுகிறோம்.

---

**உற்றதெலாம் முன்வினையாம் உண்மை யுணர்ந்தமைதி**
**பெற்றறே பரசிவத்தைப் பேணிநிற்ப தென்றேயோ**

# திருப்போரூர்
# திருப்புகழ் விரிவுரை

(சுகஸ்ரீ)

*திமிர மாமன மாமட மடமை யேனிட ராணவ*
*திமிர மேயரி சூரிய திரிலோக—*
*தினக ராசிவ காரண பனக பூஷண ஆரண*
*சிவசு தாவரி நாரணன் மருகோனே!*
*குமரி சாமளை மாதுமை அமலி யாமளை பூரணி*
*குணக லாநிதி நாரணி தருகோவே!*
*குருகு காகும ரேசுர சரவ ணுசக ளேசுர*
*குறவர் மாமக ளாசைகொள் மணியேசம்*
*பமர பாரப்ர பாருண படல தாரக மாசுக*
*பசுர பாடன பாளித பகளேச!*
*பசித பாரண வாரண துவச ஏடக மாவயில்*
*பரவு பாணித பாவல பரயோக!*
*சமப ராமத சாதல சமய மாறிரு தேவத*
*சமய நாயக மாமயில் முதுவீர*
*சகல லோகமு மாசறு சகல வேதமு மேதொழு*
*சமர மாபுரி மேவிய பெருமாளே!*

(*திமிர......அரி சூரிய!*)

(பதவுரை.) *திமிர மா மனம்* - (எமது) மனத்தில் இருக்கும் பேரிருளையும்;

*மா மடம்* - மிக்கு இருந்த அறியாமை யிருளையும்;

*மடமையேன் இடர் ஆணவ திமிரமே அரி சூரிய* - அறிவிலி யான அடியேற்கு (சேரும்) இடர்ப்பாடுகட்கு இடமான ஆணவ (அக) இருளையும் அழிக்கும் (சுக) ஞான சூரியனே!

(*திரிலோக......மருகோனே!*)

*திரிலோக தினகரா* - (மண் விண் பாதலம் எனும்) மூவுலக(ப் புறஇருள் அழிய ஒளி வழங்கும் புனித) பரிதியே!

---

பந்த நினைவு பறந்தேகப் பக்திநெறி
சொந்தமென ஆகிச் சுகமுறுவ தென்றேயோ

சிவ - (செம்மை தரும் ஆறுமுகச்) சிவனே!

காரண - (எதற்கும் முழுமையான) மூலனே!

பனக பூஷண ஆரண சிவ சுத - அரவுகளை ஆபரணமாக அணிந்த சிறந்த வேத முதலான சிவனார் மகனே!

அரி நாரணன் மருகோனே - அறியாமைப் பகையை அழிக்கும் (நாரமெனும்) நீர் மயமான திருமால் மருகா!

(குமரி......கோவே!)

குமரி - என்றும் இளையவள்; சாமளை - கருமை பசுமை கலந்த நிறத்தினள்; மாது - அற்புத அழகினள்; உமை - (வாகான) பிரணவ வடிவி; அமலி - எந்த அழுக்கும் இல்லாதவள்; யாமளை - மேலான பசுமை மேனியள்; பூரணி - (உயர்தரு) நிறைவை யுடையவள்; குண கலா நிதி-(சிறந்த அருள்) குணக் கலைச் செல்வியான; நாரணி தரு கோவே - வேதம் கூறும்) நாரணர் தங்கை தந்த நலம் சிறந்த பெருமானே!

(குரு......மணியே!)

குரு - (எவர்க்கும்) குருவே!; குகா - (இதய) குகையில் இருப்பவனே!; குமர ஈசுர - பதினாறு வயது என்றுமான பரம செல்வமே!; சரவண - (ஒளியும் ஈகையும் அறமும் மறமுமான அருமை) சரவண நாமத்தோடு அவதரித்தவனே!;

சதளேசுர - உருவத் திருமேனியான உயரிய செல்வமே!;

குறவர் மாமகள் ஆசை கொள் மணியே - குறவர் குலப் பெரு மகளான வள்ளியார் மாபெரும் பற்று வைத்த மாணிக்கமே!;

(சம் பமர......பகளேசா!)

சம் பமர - (வேத) வண்டுகள் இன்புறும்; பார ப்ரபா - மகிமை ஒளியை யுடையவனே!;

அருண பாடல தாரக - செக்கிறப் பகுதியான (விசாக) நட்சத்திர ஜன்மனே!;

மா சுக - பேரின்பப் பிழம்பே!;

பசுர பாடன - பாசுர உபதேசம் பண்ணுபவனே!;

பானித - (அரிய) பட்டாடை அணிந்தவனே!;

பகள ஈச - (சிறந்த மலைகளான) குறிஞ்சி நிலச் செல்வனே!;

---

முன்பிறப்பு வாசனையும் மூடுகரு வாசனையும்
பின்பழக்க வாசனையும் பீடழிவ தென்றேயோ

(பசித......பாவல!)

பசித பாரண - திருநீற்றுப் (பசிக) பாராயணனே!

வாரணத் துவச - (உயர்நாத) சேவல் கொடியை உயர்த்தியவனே!

ஏடு அக மா அயில் பரவு பாணித - வெற்றிநிலை வடிவமான தெய்வ வேல் ஏந்திய திருக்கரத்தினனே!;

பாவல - (வளமிகு) பாடலில் வல்லவனே!;

(பர யோக......முது வீரா!)

பர யோக—முதன்மை யோக மூர்த்தியே!;
சம பர — மேலான சமநிலை மேவியவனே!,

மத சாதல - புறச் சமய அழிவு செய் புனித மூர்த்தியே!;

சமயம் ஆறு இரு தேவத - ஆறு சமய அதிபதி யான தெய்வமே!;

சமய நாயக - (தளரும்) சமயத்தில் தலைமை தாங்கி நடத்தபவனே!;

மா மயில் முது வீரா — ஆவரண மயில் நடத்தும் அநாதி நித்திய வீர விஜயனே!;

(சகல......பெருமாளே!)

சகல லோகமும் - எவ்வுலகும், ஆசு அறு சகல வேதமுமே தொழும் - களங்கமற்ற அறிவு நூல்களின் அதிதேவதைகளும் வாழ்த்தி வழிபடும்;

சமர மாபுரி மேவிய பெருமாளே - திருப்போரூரில் விரும்பி எழுந்தருளிய பெரிய பொருளே, (உதவியருள்), (எ-று).

விரிவுரை

முதலடியை, மா திமிரம் என்று மாற்றிப் பொருள் கோடல் மரபு.

"திமிரமே அரி சூரிய!"

என்னும் மனத்தில் இருள் உளது. அதனால், உள்ளிய தெல்லாம் உண்மையாவது இல்லை.

அறியாமையின் மிகுதியை வாயால் அறியலாம்; சொல்லும் சொற்களில் இருள் சூழ்ந்துளது. அதனால், வாய் மொழிகளும்

---

ஒட்டி உடலை உருவழிக்கும் நோய்போல
கெட்டநிலை செய்யுறவு கேடுபெற லென்றேயோ

வாய்மை யாவது இல்லை. பாழிருளை ஆணவம் பரப்புவதால், விமல மெய் விளங்குவதா யில்லை.

இந் நிலையில், கருணை வடிவான இறைவன், கருதும் இதயத் தில் காட்சியானால், அக இருள் மூன்றும் அழியும். அதன் பின், உண்மை உயரும்; வாய்மை வளரும்; மெய்ம்மை மேவும். இப்படி அக இருளை அழிக்கும் ஆதித்தன் அத்தன்.

ஆ! என்ன அருமையான செய்தி! புற இருள் ஒழிக்கும் புனித பரிதி அவனே என்பதை,

''திரிலோக தினகர'' என்னும் விளி தெரிவிக்கின்றது.

அக இருள் புற இருள் அழிந்த பின், அனுபவம் செய்யும் மங் களன் ஆதலின், 'சிவ' என்றார்.

எதற்கும் மூல காரணமாய் நின்ற மூர்த்தியே என்பார், ''காரண'' என்றார்.

பாம்புருவான பரிக்ரக சக்திகள், பாரனைத்தும் காக்கும் தெய்வப் பாவையர். அவர்களை, சிறந்த அணியாகக் கொண்டார் சிவபிரான். புனித வேதங்கள் அவரைப் போற்றுகின்றன. அவ ரளித்த அமுத மகனே எனும் பொருளில், ''சிவசுத'' என்றார்.

(பனகம் - பல் நகம்; நகம் — மலையும் மரமும்; அவைகளில் உறையும் அரவுகளை, பனகம் என்பது பழைய மரபு. ஆரணம் - வேத சாகைகள். சுதை - அமுதம்; அமுத மயம் ஆனனை, 'சுத' என்னும் அருமையே அருமை.)

வெம்மைப் பகையை வீழ்த்தினார்; தண்மை நீர்மை தழுவினார். ஆதலின், திருமால் 'அரி காரணர்' எனப் பெறுவர். அவர் அன்பு மகளை மருவ வந்த முருகனை, 'மருகோனே' என்றார்.

(அரி-ஹரி; ஹரித்தல்-அழித்தல். காரம்-நீர்; அந் நீரின் நிறம் ஆனவர் ஆதலின், அவர் காரணர் எனும் பெயர் எய்தினர்.)

எண்ணத் தக்க இறைவியை, எட்டுப் பெயர் கொண்டு ஏத்தினார்.

குருநாதன், ஸ்வாமி நாதன் எனும் பெயர்கள், அனைவர்க்கும் 'குரு' முருகனே எனலை அறிவிக்கின்றன.

அகமிருந்து புறம் வருவன்; உணர்த்துவன உணர்த்தி, புற மிருந்து அகம் புகும் இப் புனித குருவை, 'குரு குக' என்று விநயம் கொண்டு விளித்தார்.

---

வருமுன் அறிந்தே வழிகாட்டு கின்றார்
திருமுன் பிருந்தே தெளிவுபெற லென்றேயோ

"நெறியிற் செறிந்த நிலை நீங்கி,
கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென் றோர் திருப்பேர் கொண்டு"

எனும் கலி வெண்பாவாலும் இதை யறியலாம். இந்நூலின் விரிவுரையை, இங்குப் படித்து உணர்வதில் பயன் உண்டு.

இதய குகை - அந்தரங்கப் பள்ளி யறை. அங்கிருக்கும் ஆன்ம மணமகளை, பரிபாகம் கண்டு அணைவோன் ஆதலின், 'குமரேசா' என்று கூவினார்.

"ஒடுக்கன்று நின்றோடு கடுவான பஞ்சணையிற்
படுத்துறங்க நானாசைப் பட்டேன் பராஞ்சுடரே"

என்பர் பரம்பனடிகள்.

மேல் பகுதியில் தேவியைக் 'குமரி' என்றார். குமரி தந்த குமரேசுரன் அவன் என்று, மீட்டும் குறிப்பித்தார்.

'குமரன் கிரிராஜ குமாரி மகன்'

என்று அநிதல் அநுபூதி முறை குமரியிடம் உதயமான குமரன், ஆன்மக் குமரியை இதய குகையில் அணைபவன் என்பது அரிய ஒரு அறிவிப்பு.

நிஷ்களனை என்றும் நினைக்க முடிவதில்லை ஆதலின், வாழ்விக்கும் அருளால், சகளனாகி வருகின்றான். சகளன்-உருவத் திரு மேனியை யுடையவன்.

அவன் குரவன்; அவன் தேவியோ குறத்தி; வல்லிடும்புப் பரம்பரை யென்பதை. அவள பெயரில் உள்ள வல்லின றகரமே வலியுறுத்தும். அப்படி யிருந்தும், இடையின ரகர குரவனை அவாவினள்; அவள் மாபெரும் காதல் கொண்ட மணி அவன்.

அவன் அன்பை அறிந்தான்; அதனால், தானும் ஆசை கொண்டு அவளைத் தழுவினன்; இப்படி இரு பொருளும் வெளியாக,

'குறவர் ஆசை கொள மாமணி' எனும் பகுதியை, எண்ணும் உளத்தில் இன்பம் பிறக்கும்.

பமரம் - வண்டுகள். மந்திரங்கள் பல, வண்டின் ரீங்காரம் போல் வரும். ஆதலின், வேத வண்டுகள் எனப் பொருள்

---

கள்ளப் புலனைந்து காட்டுவழி செல்லாமல்
மெள்ளச் சிவமென்னை மேலுயர்த்தல் என்றேயோ

கொளப் பெற்றது. சம் - இன்பம்; மொய்த்தல் பருகல் எனவும் ஆம்.

பாரம்-மாபெரும் மகிமை. ப்ரபா-ஜோதி ஸ்வரூபா.

அருண படலம்-செங்கிரணக் கற்றைகள். தாரக-விண் மீன் ஆகிய விசாகத்தில் வந்தவனே!

பாசுரம் என்பது, பசுரம் என முதற் குறைந்தது. பாளித-சந்தனப் பூச்சினனே எனவுமாம்.

பகளம்-மலை. பசித பாரண-(திருஞான சம்பந்த ராகித்) திருநீற்றுப் பதிகம் பாடியவனே.

அருணகிரியார், கச்சியப்ப சிவாசாரியார், பொய்யா மொழியார் முதலினோர்முன் பாடல் உரைத்த திறத்தினன் ஆதலின், 'பாவல' என்றார்.

"நீவே றெனாதிருக்க, நான்வே றெனாதிருக்க
நேராக வாழ்வதற்கு" எனவும்,
"நீயும் நானுமாய் ஏக போகமாய்"
எனவும் உரைத்தபடி உயர்த்துவானை,
'சம பர' என்றார்.

அழிவு செய் மத வாதிகளை அழித்தவனை, 'மத சாதல' என்றார். அதை யடுத்து,

ஆக்கம் செய் ஆறு சமயங்களின் அதி தெய்வம் ஆனவனே எனும் மாபெரும் நுட்பம், மறக்கத் தகுவதன்று.

சமய நாயகன்-'ஆபத்தில் அஞ்சல் என்ற பெருமாள்' எனும் பொருளது.

பெருமாள்-பெருமையிற் சிறந்த பெரியோன் எனும் பொருட்டு. அருளவாயே என்பது இசை யெச்சம். முப்பது மந்திர நாமங்களால் முருகனை விளித்து, அருள்வாயே என நிறைவு பெறும் இத் திருப்புகழை, இடையறாது ஓதுவார் பேறு உரைத்தற்கு அரியதே!

**வாழ்க திருப்புகழ் வளம்!**

---

எள்ளலிலா வாழ்க்கை யினிதாகி நேரஅருள்
வெள்ளத்தில் மூழ்கி வியனுர்வ தென்றேயோ

# மனமே துதிபாடு

(பில்லூரன்)

குழலோசை கேட்கிறதே! எங்கிருந்து வருகிறது?
காற்றே! நீ பாக்கியவான்!
சந்தேகமே இல்லை.

அந்த இனிமையைச் சுமந்து எல்லா உயிர்களுக்கும் தேன் பருக உதவுகிறாய். நீதான் உடலில் ஓடிச் சுற்றி ஜீவிக்க வைக்கிறாய். ஏன், இந்த குழலோசையின் இனிமையை உடல் முழுதும் பரப்பி, என்னை ஓசைக்கு மயங்கும் நாகமாக ஆக்க மாட்டேன் என்கிறாய்?

குழலோசை இனிமை!
நாகம் அதனைப் பருகும் ஜீவகளை.
சங்கீதம் ஒரு மென்மலர்!
அதில் மொய்க்கும் வண்டுகள் பல.
உளமே!
உன்னுடன் வாழ்வது துன்பம்!
கூர்மையாக குழலோசையைப் பருகுகிறாய்.

அதற்குள்ளாக ஏதோ கோட்டைகளை கட்டிவிடு பவன் போல், தாமரை மேல் நீராக அதன் இனிமையில் தோய்கிறாய்!

உனக்கு திடச் சித்தமே கிடையாதா?

ஆண்டவன் உனை உற்பத்தி செய்யும் போது சஞ்சல கதியிலேயே இருக்க சமைத்து விட்டானா?

போதும், உன் உறவு!

இந்த உறவினை நம்பி, நம்பி, என் சரீரம் இது காறும் தேய்ந்து இளைத்தது போதும்.

கூடுதான் இருக்கிறது!
இனி எனக்கு வேண்டாம் உன் உறவு!

நான் சொல்வதைக் கேட்க மறுக்கிறாய். உன் வார்த்தைகளை நான் ஏற்பது எப்படி?

நீ தீய வழிக்கு இழுக்கிறாய்.
அதற்கு நானும் உடன் படுவதா?

---

படிந்த அமைதிப் பயனை யடியேற்கு
முடிந்த அளவிலிறை முடிப்பிப்ப தென்றேயோ

புழுவாகி, பூச்சியாக இப்படி படிப்படியாக வாழ்வை எடுத்து, தேய்ந்து தேய்ந்து உன்னத மனிதப் பிறவி எடுத்து இருக்கிறேன்.

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல்,

இந்த அரிய பிறவிக்கும் குந்தகம் விளைக்க நீ ஒரு புல்லுருவி போதாதா!

வாழ்க்கை மரமே!

உன் கம்பீரம் எத்தனை நாள்!

உன் உடலில் பார்! புல்லுருவி தோன்றி வலு அடைந்து விட்டது. இனி உனது செழிப்பு அழிப்புக்கு அது ஒன்றே போதாதா?

உன் மாசுகளை அடிக்கடி களைந்து, திருத்தமாக நடந்து கொள்ளத் தவறியதன் பலன் கைமேல் கிட்டி விட்டது.

மனமே!

நீயாக அடங்க மாட்டாயா?

நான் உன்னை என்ன செய்ய வல்லவன் என்ற துணிவு தானே!

உன் பேச்சுக்கு இனியும் செவி சாய்த்தால், என் எஞ்சிய வாழ்வையும் பறி கொடுத்து இதனிலும் இழிநிலை எய்த வேண்டியது தான்.

ஆசை சுழலுக்கு இழுத்துச் சென்று ஆவலை ஆழப் புதைத்துவிட திட்டமிடுகிறாய்.

நான் உலகப் பொருள்களின் மீது எதனிலும் நம்பிக்கை புதைத்து வாழ விரும்பவில்லை.

நம்பிக்கையே பெரும் இன்னல்!

நம்பிக்கை இன்மையே மிக இன்பம்!

உன்னிடம் நம்பிக்கையை ஊன்ற விட்டால், என் எஞ்சிய காலத்தையும் விரயம் ஆக்கி மீண்டும் மீண்டும் நரகக்குழிக்குத் தள்ளுவதற்கா?

இனி அதற்கு இடம் கொடுக்க மாட்டேன்!

கோபத்தை அடக்குவேன்!

காமத்தை ஓட்டுவேன்!

மோகத்தைக் கொல்லுவேன்!

---

**கள்ளமனம் துள்ளுவதைக் கண்டித்துக் கைகொடுத்து**
**மெள்ள அடி யேற்குமதி மேவவைப்ப தென்றேயோ**

மதத்தைத் துறப்பேன்!
மாச்சர்யத்தை முறியடிப்பேன்!
பச்சிளம் குழந்தையாக சுற்றித் திரிவேன்!
பாலஞக ஓடித்திரிவேன்!
எங்கே என் அன்னை?
எங்கே என் அப்பா?
இப்படியாக உலகில் தேடி அலைவேன்!

தேடும் அன்னையும் நாடும் அப்பனும் பச்சிளம் குழந்தையைத் தவிக்க விட்டு வேடிக்கை பார்க்க மாட்டார்கள். இது என் நம்பிக்கை; அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்! இந்த நம்பிக்கை தான் என்வைராக்யம். மனமே! உன்ஞல் இயன்றதைப் பார்! உன்னை சங்கிலியால் பூட்டி விட்டேன்! மந்திரத்தால் கட்டி விட்டேன்! கிங்கிலி ஆட்டங்கள் இனி செல்லாது!

உன்னை முழுவதுமே போக்கடிக்க முடியா விட்டாலும், தியானவேளையிலாவது உன் தொல்லைகள் இல்லாமல், மோன நித்யானந்தத்தில் பிரும்மத்தை உபாசிக்க இடம் கொடு!

நீதான் கருணை கூர்ந்து விலகி விட்டாயோ, அல்லது
நான் தான் கட்டுப் படுத்தி விலகி விட்டேனே!
ஆஞல் அந்த தியான வேளை,
என் பிறவியிலே கிடைத்த அமைதியான நேரம்!

நம்மை ஆக்குவித்த வித்தகனுக்கு இந்தக் காணிக்கை கூட செலுத்த முடியாது போஞல், எடுத்த பிறவியின் பயன் என்னே!

வியர்த்தம்! வியர்த்தம்!!

மனமே! இதுவரை என்னை ஆட்டி வதைத்தது போதும். இனிமேலும் ஆட்டி அலைக்கழிக்க வேண்டாம்.

பணிந்து உன்னிடம் ஒன்றே ஒன்று வேண்டுகிறேன்.

(தொடரும்)

---

இந்தப் படியிறைவா எளியேற் குதவிலினி
எந்தப் படியாலும் ஏற்றம் பெறுவேனே

# DIVINE DISCONTENT

"To every young man, I would give the spirit of divine discontent", so said *Steinmetz*, the well-known electrical giant and comrade of Edison. The electrical wizard, the maker of artificial lighting, had a human and philosophic side to his personality which will profit mankind to know and to contemplate. The advice he gave to young men, about 1927 or so, has a flavour of remarkable freshness which can stand all-time. "If a young man goes at his work as a means of making money only, I am not interested in him. However, I am interested if he seems to do his work for work's sake, for the satisfaction he gets out of doing it," Again he said, it would appear,

"If I were able to bequeath one virtue to every young man, I would give him the spirit of divine discontent, for without it, the world would stand still. The man hard to satisfy, moves forward, the man satisfied with what he has done moves backward."

He believed in some supernatural force or entity that governed the world. Envisaging the future and stating what he considered would be the greatest development over the next half century, he is reported to have made the remarkable prediction.

"I think the greatest discovery will be made along Spiritual lines. Here is a force which,

history clearly teaches, has been the greatest power *in the development of man and history.* Yet we have been merely playing with it and never seriously studying it as we have physical forces." He added,

"Some day people will learn that material *things do not bring happiness and are of little* use in making men and women creative and powerful. Then the scientists will turn their laboratories over to the study of God and prayer and the Spiritual forces which, as yet have hardly been scratched. When this day comes, the world will see more advancement in one generation *than it has in the last four." What prophetic* words!

Self satisfaction and fame do not put the mind at ease. They produce but discontent. Love and Kindness to the under-dog, to give a lift to *the down-trodden, to feel an equality with the so* -called big and low, to revel in the sweetness of all humanity as an expression of God, these alone lead life to contentment, pleasing contentment, active dynamic contentment, the ever serving contentment, the spirit of the great nitya-triptas! Mind is muscular still; but the spirit is mightier *of love. Will humanity move from atomic power to the artesian springs of love-power—the divine spirit.*

*Thiruppugal mani.*

தெள்ளிய மாந்தரைச் சேர்ந்திலன் ;
    தீங்கவி பாடல் உற்றேன் !
ஒள்ளிய சொல்லும் பொருளும்
    பெறேன் ; உரைத்தார் உரைத்த
கள்ளிய புக்கால், கவிகள்
    ஒட்டார்; கடல்நஞ்சு அயின்றாய் !
கொவ்ளிய அல்ல கண்டாய்
    புன்சொல் ; ஆயினும் கொண்டருளே !

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

Regd. M. No. 5390, Amirthavachani (1957 மார்கழி—அமிர்தவசனி)

-468-


# Coffee

Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO, (MADRAS), LTD. MADRAS

---

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

## சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd:—1924. Phone:—113


---

## அரிய தெய்வ அருள் நூல்கள்

குக ஸ்ரீ. ரசபதி விரிவுரையுடன்

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி | 1 | 0 | 0 |
| ,, 6 திருவகுப்புகள் | 1 | 8 | 0 |
| ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் | 2 | 0 | 0 |
| ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல் | 1 | 8 | 0 |
| திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள் | 0 | 6 | 0 |
| திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்) | 0 | 12 | 0 |
| கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன் | 1 | 0 | 0 |

தேவி தாஸர்கள் (அற்புத வரலாறு) (அச்சில்)
சிவநேயச் செல்வர்கள் ,, ,,
கணபதி பக்தர்கள் ,, ,,
முருகனடியார் ,, ,,

**அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1**

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18
Edited & Published by S. Muthuswami, 54, Bunder St., Madras-1.